Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி–27 | 09–06–2004 | புதன்கிழமை | ஓசை –112




## பாராளுமன்றத்தில் நேற்று அமளி துமளி

# ஆளும்–எதிர்க்கட்சியினரிடையே கைகலப்பு

# ஹெல உறுமய பிக்குகள் இருவர் படுகாயம்!

## செங்கோல் ஆளும் கட்சியால் பறிப்பு

(கொழும்பு)

**பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு நேற்று இடம்பெற்ற வேளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் - ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில், ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகள் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து இவர்கள் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதேவேளை, பாராளுமன்றத்தில் நடந்த அமளி துமளியின்போது செங்கோல் சபாநாயகரிடம் இருந்து ஆளும் கட்சி உறுப்பினர்களால் பறித்துச் செல்லப்பட்டு ஒழித்து வைக்கப்பட்டது.**

ஜாதிக ஹெலஉறுமயவின் சார்பில் புதியபாராளுமன்ற உறுப்பினரான அக்மீமன தயாரட்ண தேரர் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள முற்பட்டபோது ஆளும் தரப்பில் இருந்து அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே அதற்கு தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குறிப்பிட்ட தேரருக்கு எதிராக பதவிப்பிரமாணம் செய்து கொள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## எமது இரு உறுப்பினர்களை ஆளும் கட்சியினரே தாக்கினர்

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களான இரு பௌத்தபிக்குகள் பாராளுமன்றத்தில் நேற்றைய அமளிதுமளியின் போது தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர். இவர்களை ஆளும் கட்சியினரே தாக்கியதாக ஹெல உறுமய குற்றம் சாட்டியுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்களான கொலன்னாவ சுமங்கல தேரர், அக்மீமன தயாரட்னதேரர் ஆகிய இருவரும் ஆளும்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்றில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## செங்கோல் இல்லாவிடினும் பாராளுமன்றம் நடைபெறலாம்

### முன்னாள் பாராளுமன்றச் செயலர் சாம் விஜயசிங்க

பாராளுமன்றத்தில் செங்கோல் இல்லாமலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என முன்னாள் பாராளுமன்ற செயலர் சாம் விஜயசிங்க தெரிவித்துள்ளார். நேற்று செங்கோல் இல்லாமலேயே ஜாதிக ஹெல உறுமயவின் புதிய பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன தயாரட்ண சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமை தொடர்பில் கருத்துரைத்த சாம் விஜயசிங்க சபாநாயகர் ஒருவர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதாக கூறும் வரையில் அந்த சபையில் இடம்பெறும் நடவடிக்கைகள் யாவும் அரசியலமைப்புக்கு உட்பட்டவையாக கருதப்படும் என தெரிவித்தார்.



செங்கோல

இதேவேளை பாராளுமன்றத்தில் நேற்று ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## எவ்வித தாக்குதல் சம்பவமும் பாராளுமன்றில் நடக்கவில்லை

### அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

நேற்றுப் பாராளுமன்றத்தினுள் எவ்வித தாக்குதல் சம்பவங்களும் இடம்பெறவில்லையென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பானாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அச்செய்திகளில் பாராளுமன்றத்தினுள் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எவ்வித தாக்குதல்களும் இடம்

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஜூலை 20 வரை பாராளுமன்றம் ஒத்திவைப்பு

பாராளுமன்றம் மீண்டும் ஜூலை மாதம் 20ஆம் திகதி கூடும் என சபாநாயகர் டபிள்யு ஜே. எம் லொக்கு பண்டார நேற்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## - அரசாங்கத்திடம் பெரும்பான்மை இல்லை -

# தம்மிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சிகள் இன்று கோரவுள்ளன

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பெரும்பான்மை, எதிர்க்கட்சிகளிடம் இருப்பதால் ஆட்சியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரவுள்ளன. இதற்கான தீர்மானம் இன்று மேற்கொள்ளப்பட்டு அந்தத் தீர்மானம் சனாதிபதிக்கும் பாராளுமன்ற சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சி தரப்புகள் தெரிவித்துள்ளன.

அரசாங்கம் கடந்த நான்கு பாராளுமன்றக் கூட்டத்தொடரில் தமது பெரும்பான்மையை நிரூபிப்பதில் இருந்து தவறியுள்ளது. அதேநேரம் பாராளுமன்றத்திலும் அதன் செயற்பாடுகள் எதிர்க்கட்சி ஒன்றின் செயற்பாடுகள் போன்று பொறுப்பற்ற விதத்தில் அமைந்துள்

(14ஆம் பக்கம் பார்க்க)

### நாவிதன் வெளிப்பகுதியில்

## அரசியல்துறைப் பணிமனை மீது கைக்குண்டுத் தாக்குதல்

நாவிதன் வெளி அரசியல் துறைப் பணிமனை மீது கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இரவு 10 .15 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதல் இடம் பெறுவதற்கு முன் விசேட அதிரடிப்படையினர் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மலையக வன்முறையை நிறுத்த பேரணியின் போது கோரப்படும்

### யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ். நகரப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் கண்டனப் பேரணியில் "மலையக மக்கள் மீதான "வன்முறைகள் மற்றும் கொலைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்" எனவும் எதிர்வரும் காலப்பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்" எனும் கோரிக் கையையும் முன்னிறுத்தி யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கண்டனப்பேரணிக்கான ஏற்பாட்டுக் கூட்டத்திலேயே இம்முடிவு ஏகோபித்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## நடேசன், தம்பையா கொலைகளைக் கண்டித்து திருகோணமலையில் இன்று பூரண கதவடைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இன்று பத்திரிகையாளர் நடேசன், பேராசிரியர் தம்பையா ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து பூரணகர்த்தால் நடத்தும்படி தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்விக்கூடங்கள், போக்குவரத்துக்கள் யாவற்றையும் நிறுத்தி திருமலை மாவட்டத்தை ஸ்தம்பிதம் அடையச்செய்வதன் மூலம் எமது எதிர்ப்பை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம் என்று அவ்வழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் பாதுகாப்புப் படைகள் தமிழ்தேசியத்துக்கு எதிரான தேசவிரோத கும்பலுடன் ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்துகின்ற சகல சதிகார நடவடிக்கைகளைக் கண்டித்தும்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

உ.யோகராணி என்பவரின் 1/2 ஏக்கர் மேட்டுக்காணி பரந்தன் 1ஆம் கட்டை முல்லை. வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி சதானந்தம் ஆசிரியார் வீடு துர்க்கையம்மன் கோவில் 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு. (4096)

### தவறிவிட்டது

பேரம்பலம் ஞானகுமார் இல 749 யோகபுரம், மல்லாவி என்ற முகவரியைச் சேர்ந்த எனது தேசிய அடையாள அட்டையும், குறிப பேடும் 07.06.2004ஆம் திகதி தர்மபுரத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோஅல்லது தர்மபுரம் காவல் பணிமனையிலோ ஒப்படைக்கவும். தகவல்:- போராளி நிமலன்(4582)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சி பொலிமர் றபர்ஸ்டாம் உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி லேமனட்டில் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ள பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி
TP. 0212285750 (சி.9823)

### கணினி அன்பளிப்பு

முல்லை மாவட்டம் கட்டம் 1 வைத்தியசாலைக்கு உலக சுகாதார நிறுவனத்தால் கணினி வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய வசதிகள் குறைவாக காணப்பட்டபோது இக்கணினி பெரும் பயன் தருகின்றது என வைத்தியசாலை அலுவலகத்தினர் தெரிவித்தனர். மே மாதம் 30 ஆம் திகதி வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (20)

- கண்டாவளை, பளைக் கோட்டத்தில் -

# காலை உணவு வழங்குவதற்கான பயிற்சிப்பட்டறை ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கண்டாவளை, பளைக்கோட்டத்தில் உள்ள தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவது சம்பந்தமான பயிற்சிப் பட்டறை இன்று காலை 8.30 மணிக்கு தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உலக உணவுத்திட்ட வடபிராந்திய இணைப்பாளர் ரவி ஆனந்தராசா கலந்து கொண்டு உணவூட்டல் பயிற்சிக் கருத்துரைகளை வழங்கவுள்ளார். நாளை மறுதினம் மேற்படி கருத்தரங்கு கிளி.பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி பயிற்சிப்பட்டறையில் அந்தந்த பகுதி பாடசாலை அதிபர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள், பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க செயலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ.கு)

# மன்னார் சித்திவிநாயகர் முன்பள்ளி சிறுவர்கள் ஆக்கக் கண்காட்சி

(மன்னார்)

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியக் கல்லூரியில் முன்பள்ளி சிறுவர்களுக்கான ஆக்கக் கண்காட்சி ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. இதனை மன்னார் முன்பள்ளி கல்வி மேம்பாட்டுப் பிரிவு ஒழுங்கு செய்திருந்தது. காலை-10.00 மணி தொடக்கம் மாலை ஆறு மணிவரை நடைபெற்ற இக்கண்காட்சியில் சிறுவர்களின் கைவண்ணங்களினால் உருவான படங்கள், ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிப்பணிப்பாளர் அவர்களும் வாழ்வோதய இயக்குனர் அருட் ஜேசுதாஸ் அவர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழக மன்னார் பணிப் பாளர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (மி)

## ஆண்டு உற்சவம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பெரிய இத்திமடு கிராமத்தில் நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. (05)

## பாரஊர்திச் சக்கரம் தவறிவிட்டது

07.06.2004ஆம் திகதி எமது பாரஊர்திச் சக்கரம் ரிம்முடன் புளியங்குளத்திற்கும், பளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குறிப்பிடப்படும் தொலை பேசி இலக்கங்களுடன்தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம்.
T.P.021-2263500
HP. 0777-671555

கொழும்பு
T.P. 0112478444
HP. 0777271478

தகவல்: S.சந்திரசேகரன்
G.தேவநேசன்
(4581)

## 82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம்-2004

### பாடசாலை மாணவர்களுக்கான மாவட்டமட்டப் போட்டிகள்

காலம்:- 2004.06.12 சனிக்கிழமை
நேரம்:- மு.பகல் 9.00மணி
இடம்:- கிளி.கனகபுரம் மகாவித்தியாலயம்.

| போட்டி விபரம் | | |
|---|---|---|
| பேச்சு | ஆண்டு 10, 11, 12, 13 | 5-7 நிமிடம் |
| கட்டுரை | | 1மணி |
| சித்திரம் | | 1மணி |

வினாவிடை (4பேர் கொண்ட குழு)

சித்திரப் போட்டிக்கு நிறம் தீட்டும் பொருட்கள் கொண்டு வருதல் வேண்டும்.

மேற்படி போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்கள் அதிபரின் உறுதிப்பாட்டுக் கடிதத்துடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
மாவட்ட கூட்டுறவுச் சபை/கிளி. (சி-9711)

# தமிழரின் அபிலாசைகளை எடுத்துரைக்க கண்டனப் பேரணியில் அணிதிரள்வோம்

- கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்

"தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் சிறிலங்கா அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துரைக்க கண்டனப் பேரணியில் அணிதிரள்வோம்."

என கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் யாழ்.இல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கண்டனப் பேரணி தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எத்தனையோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எமது மக்களின் வாழ்விடங்கள் பல சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் எமது மக்களினுடைய இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கண்டனப் பேரணி ஒழுங்கு செய்யப்படுகின்றது.

* யாழ். மாவட்டத்தில் தத்தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு அல்லலுறும் இடம் பெயர்ந்தோர் எவ்வித இராணுவ நெருக்கு வாரங்களும் இன்றி மீளக்குடியேற உள்ள தடைகளை அகற்றுதல்.

* மக்கள் தமது இயல்பு வாழ்நிலையை மேற்கொள்ளவும், தமது வாழ்நிலையில் மேம்பாடு காணவும் தடைகளாகவுள்ள நெருக்குவாரங்களை அகற்றுதல்.

* தமழ் மக்களது அரசியல் அபிலாசைகளையும், அவர்களது இன்னல்களையும் வெளியிடும் ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் மீது திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் படுகொலைகளை தடுத்து நிறுத்துதல்.

மேற்கூறிய காரணங்களை முன்னிலைப்படுத்தி 11ஆம்திகதி இடம்பெறவுள்ள பேரணியில் சகல கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடைக் காரியாலயம்

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உரிய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தற்போது கனகராயன்குளம் கமநல அபிவிருத்தித் திணைக்கள செயலகத்தில் கடந்த முதலாம் திகதி முதல் பண்ணையாளர்களின் நன்மை கருதி இயங்க ஆரம்பித்துள்ளது. ஆகவே வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கான பண்ணையாளர்கள் அனைவரையும் இச் செயலகத்தில் தங்களின் கால்நடைக்கான சேவைகளை பெற்று நன்மையடையும் வண்ணம் வவுனியா மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்புத் தெரிவித்துக்கொள்கிறது.

# பூநகரிப் பிரதேசத்தில் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு பூநகரியில் சிறப்புற நடைபெற்றுள்ளது. பூநகரி மகாவித்தியாலயத்திலிருந்து பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் எழுச்சிப் பேரணி ஆரம்பமாகியது பின்னர் பூநகரி வாடியடியில் நிகழ்வுகள் நல்லூர் மகாவித்தியாலய அதிபர் தலைமையில் ஆரம்பமாகியது. பொதுச்சுடரினை மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் ஏற்றி வைக்க தேசியக் கொடியினை பூநகரிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சரூபன் ஏற்றி வைத்தார். தியாகி சிவகுமாரன் அவர்களின் படத்திற்கான சுடரினை கிளி/மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் த.நிருபன் ஏற்றி வைக்க படத்திற்கான மலர்மாலையினை பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளரும், பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழனும் அணிவித்தனர். கருத்துரைகளை அதிபர் கலைச் செல்வன், ஆசிரியர் விசுவாசம் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கல்வி மேம்பாட்டுப்பிரிவின் பணிப்பாளர் ராணி மைந்தன் நிகழ்த்தினார். தொடர்ந்து இரவு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இதில் பாடசாலை மாணவர்களுடன் பெருமளவான மக்களும் கலந்து கொண்டனர்.

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பார்த்தீனியம் செடி அழிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பார்த்தீனியம்செடி அழிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நேற்றுக்காலை 10.00 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே. தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், விவசாய போதனாசிரியர்கள், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கமக்கார அமைப்புக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கருத்துரைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை. மாவட்ட இணைப்பாளர் அமிர்தலிங்கம் முல்லை. மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் வழங்கினர். (05)

UNHCR
The UN Refugee Agency

## உலக அகதிகள் தின சைக்கிள் ஓட்டப் போட்டி

உலக அகதிகள் தினத்தை கொண்டாடுமுகமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) எதிர்வரும் யூன் 20ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வன்னியில் சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது. ஆண்களுக்கான 30 மைல்கள் நீளமான சைக்கிள் ஓட்டப்போட்டி மல்லாவியிலிருந்து ஆரம்பமாகி மாங்குளம் சந்தி ஊடாக கிளிநொச்சியில் முடிவுறும். பெண்களுக்கான 17 மைல்கள் நீளமான சைக்கிள் ஓட்டப்போட்டி மாங்குளத்தில் ஆரம்பமாகி கிளிநொச்சியில் முடிவுறும். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தத்தமது பெயர், வயது, பால், தொடர்புகொள்ளக்கூடிய முகவரி அடங்கிய விண்ணப்பத்தினை கரடிப்போக்கு, ஏ-9 வீதியில் அமைந்துள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் யூன் 15ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்களும், போட்டியில் பங்குபற்றி இறுதி இலக்கை அடையும் அனைவருக்கும் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### போட்டி நிபந்தனைகள்

44 பற்களையுடைய கொக்குவீலும் 18 பற்களையுடைய பிறீவீலும் கொண்ட சாதாரண கைப்பிடி கொண்ட சைக்கிள்கள் மாத்திரமே பயன்படுத்த போட்டியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆண் போட்டியாளர்களால் பயன்படுத்தப்படும் சைக்கிள்கள் பரிசோதனைக்காக மல்லாவி மத்திய கல்லூரியிலும், பெண் போட்டியாளர்களால் பயன்படுத்தப்படும் சைக்கிள்கள் பரிசோதனைக்காக மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் யூன் 20ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாகப் போட்டிக் கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

யு.என்.எச்.சி.ஆர். அலுவலகம்,
கரடிப்போக்கு, ஏ-9வீதி,
கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285722, 021-2285764
மின்னஞ்சல்: LKAKI @unhcr.ch
(4584)

# ஸ்திரமான ஆட்சி ஈராக்கில் ஏற்படும்வரை பன்னாட்டுப்படைகள் இருக்க வேண்டும்

## புதிய பிரதமர் இயாத் அலாவி கருத்து

(பாக்தாத்)

**"ஈராக்கில் ஒரு ஸ்திரமான ஆட்சி ஏற்படும்வரை பன்னாட்டுப் படைகள் ஈராக்கிலேயே நீடித்திருக்கவேண்டும்" இவ்வாறு ஈராக்கின் இடைக்கால அரசின் புதிய பிரதமர் இயாத் அலாவி ஞாயிற்றுக்கிழமை பி.பி.ஸிக்குப் பேட்டியளிக்கையில் கூறியுள்ளார்.**

ஆனால் ஈராக்கில் ஒரு ஸ்திர நிலை ஏற்பட எவ்வளவு காலம் எடுக்கும் என்றோ, பன்னாட்டுப் படைகள் எவ்வளவு காலம் ஈராக்கில நிலைகொண்டிருக்கும் என்றோ அவர் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை. ஆனால் ஈராக்கில் விரைவில் ஸ்திரநிலை ஏற்பட்டுவிடும் அதனை உருவாக்கிவிடுவோம் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஈராக் மக்களை எதிரிகளிட மிருந்து காக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் சபை எமக்குத் துணை நிற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். தனக்கு வீட்டோ எனும் அதிகாரம் இல்லாது விட்டாலும் கூட ஈராக் தொடர்பான ஆதரவு அல்லது எதிர் நடவடிக்கைகளின் விளைவுகள் குறித்துக் கருத்துச் சொல்லும் உரிமை, சுதந்திரம் வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஈராக்கில் மசூதி மீது ரொக்கட் தாக்குதல்; உள்ளிருந்த வெடிபொருட்கள் வெடித்து இருவர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் ஷியாபிரிவுத் தீவிர வாதிகள் பழமைவாய்ந்த மசூதி மீது ரொக்கட் தாக்குதல் நடத்தி யுள்ளனர். இதில் இரண்டு ஈராக் கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் பஸ்ரா நகரில் நடந் துள்ளது. மசூதியினுள் வெடி பொருட்கள் பதுக்கி வைக்கப்பட் டிருந்ததை அறிந்தே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனால் தான் மசூதியை இலக்கு வைத்து ரொக்கட் தாக் குதல் நடத்தப்பட்டுள்ளது. வெடி பொருட்கள் வெடித்து சிதறியுள்ளன. இதன்போது பாதையில் நடந்து சென்று கொண்டிருந்த பொதுமக் கள் இருவரே பரிதாபமாக உயிரி ழந்துள்ளனர்.

தாக்குதல் நடந்ததை ஈராக் கிலுள்ள அமெரிக்கக் கூட்டுப் படைகள் உறுதிசெய்துள்ளன. ஆனால் காயமடைந்தவர்கள் ஈராக்கியர்களா... படையினரா... ஷியா தீவிரவாதிகளா என்பதை அவர்கள் உறுதிப்படுத் துவதற்கும் முன்வரவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

சம்பவம் நடத்துள்ள பஸ்ரா நகரில் ஈராக் பொலிசார் பாது காப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.



பாக்தாத்தில் விமான நிலையத்துக்கு செல்லும் பாதையில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பை அடுத்து அங்கு தீப்பற்றி எரியும் வாகனம்.


# ஜப்பானில் சட்டவிரோதமாக தங்கியுள்ள தொழிலாளர் கைது

(ரோக்கியோ)

சட்டவிரோதமாகத் தங்கியிருந்து வேலை பார்க்கும் வெளி நாட்டவர் களைக் கைது செய்யும் முயற்சிகளை ஜப்பானிய அரசாங்கம் ஆரம்பித் துள்ளது.

இத்திட்டத்தின் ஒருகட்டமாக நேற்று ஆசிய நாடுகளைச் சேர்ந்த சட்ட விரோத தொழிலாளர்களை ஜப்பானிய அரசு மடக்கிப்பிடித் துள்ளது.

அல் ஹைய்தா-ஜப்பானில் தமது வலைப்பின்னலைப் பாதிக்கக்கூடும் என்ற அறிக்கைகள் வெளியான தன் பின்னர் குடிவரவு உல்லாசப் பயணத்துறை சார்ந்த கட்டுப்பாடு களை அதிகரிக்குமாறு ஆளும் கட்சியின் தரப்பில் இருந்து ஆலோ சனை கூறப்பட்டதையடுத்தே சட்டவிரோதமாக ஜப்பானில் தங்கியிருக்கும் தொழிலாளர்களை கைது செய்ய ஜப்பானிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நோர்மண்டி தரையிறக்கத்தின்போது மரணித்த ஜேர்மன் இராணுவ வீரரின் புதைகுழியில் நினைவஞ்சலி செய்யும் ஜேர்மனியப் பிரதமர்.

# தடுப்புச்சுவர் அமைக்கும் முயற்சியை எதிர்த்து பலஸ்தீனர் ஆர்ப்பாட்டம்

(ஜெருசலேம்)

சர்ச்சைக்குரிய மேற்குக் கரைப் பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்க இஸ்ரேல் மேற்கொண்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் இதன் போது இஸ்ரேலியப் பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி அவர்களைக் கலைந்தோடச் செய்தார்கள்.

பலஸ்தீனர்களால் ஏற்பட்டுவரும் தொடர் தாக்குதல்களைத் தடுக்கும் முகமாக இஸ்ரேலியர்களால் இந்த தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு வருகிறது. இதனையே பலஸ் தீனர்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இந்த நடவடிக்கை யினால் மேற்குக் கரைப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு வருகிறது.

# தென்கொரியாவிலுள்ள அமெ.படையினர் எண்ணிக்கை மேலும் குறைவடையும்

## அமெரிக்கா அறிவிப்பு

(சியோல்)

தென்கொரியாவில் இருக்கும் 37000 அமெரிக்கப்படைகளில் 2005ஆம்ஆண்டு டிசம்பர் மாதத் திற்குள் 12500 படையினரை மீளப்பெற அமெரிக்கா திட்டமிட்டு ள்ளதாக தென்கொரிய வெளிவிவ கார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் படைத்துறையில் நெகிழ்வுத் தன்மையினை ஏற் படுத்தவே இவ்வாறு திட்டமிட்டுள் ளதாக அமெரிக்கா தெரிவித்துள் ளது. வடகொரிய தென் கொரிய யுத்தத் தினையடுத்தே தென் கொரியாவில் அமெரிக்கப்படை நிலைகொண் டிருப்பது குறிப் பிடத்தக்கது.

தென்கொரியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படை யினரில் ஒருதொகுதியான 3500 படையினர் அங்கிருந்து அண்மை யில் ஈராக்கிற்கு அனுப்பிவைக் கப்பட்டமை தெரிந்ததே.



பாகிஸ்தான் கியுற்றா நகரிலுள்ள வெளிநாட்டு உதவி வழங்கும் காரியாலயத்தில் குண்டு வைக்க எத்தனித்த அல் ஹைதா சந்தேக நபர் ஒருவர் தலை மறைவாகியதையடுத்து வாக[illegible]ளை சோதனையிடும் பாகிஸ்தான் பொலிசார்.

# குடிவரவு, குடியகல்வு சட்ட நடைமுறை மேலும் கடினமாக்க பிரிட்டன் உத்தேசம்

(லண்டன்)

பிரிட்டன் குடிவரவு ,குடியகல்வு சட்டநடைமுறைகளை மேலும் கடினமாக உத்தேசித்துள்ளது. இவ் வாறு சண்டே டெலிக்கிராம் நாளிதழ கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களா தேஷ்,நைஜீரியா ஆகிய நாடுக ளைச் சேர்ந்தவர்களுக்கே குறிப்பாக இறுக்கமான, கடினமான சட்டநடை முறைகளை பிரிட்டன் ஏற்படுத் தவுள்ளது. பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் தலைமையில் உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கட், குடிவரவு குடி யகல்வு, அமைச்சர் ஜஸ்மன் பிறண், வர்த்தகத்துறை அமைச்சர் பட்டிஹேற அகவிட்ஜ வெளியுற வுத்துறை அமைச்சர் ஜக்ஸ்றோ ஆகியோர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கலந்து கொண்டுள்ள கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது

இந்தியா,பாகிஸ்தான் பங்களா தேஷ், நைஜீரியா ஆகிய நாடுக ளிலிருந்து வருபவர்கள் மட்டுமே பிரிட் டனின் சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்று பிரிட்டன் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

அதனால் தான் இந்நாடுகளிலிருந்து வருவோரை கூடியபாகம் தடுப் பதற்காக இத்தகைய இறுக்கமான சட்டநடைமுறைகளைப் பின்பற்ற தீர்மானம் எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.



பல பணமோசடிகளிலும் வன்செயற்சம்பவங்களிலும் ஈடுபட்ட குற்றத்தால் 15 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தற்போது விடுதலை பெற்றுச் செல்லும் ருவாண்டா சனாதிபதி.

# முஸ்லிம் நாடுகளுக்கு பாடத்திட்டம் தயாரிக்க மலேசியாவில் ஐந்துநாட்கள் கருத்தரங்கு

(கோலலம்பூர்)

முஸ்லிம் நாடுகளின் ஒருமித்த கருத்தினடிப்படையில் பாடத்திட் டங்களை வகுப்பது குறித்தும், மாறிவரும் நவீன, விஞ்ஞான தொழில்நுட்பத்தினை பாடப் புத்த கத்தில் புதிதாக புகுத்துவது குறித்தும் உலகிலுள்ள இஸ்லா மிய நாடுகள் இணைந்து ஐந்து நாட்கள் கருத்தரங்கைத் தொடங் கியுள்ளது.

இந்தக் கருத்தரங்கு ஞாயிற்றுக் கிழமை மலேசியாவின் கோலாலம் பூரில் தொடங்கி யுள்ளது.

இந்த மாநாட்டில் பாகிஸ்தான், ஈரான், ஆப்கானிஸ்தான், இந்தோ னேஷியா, கஸகஸ்தான், மாலை தீவு உள்ளிட்ட அனைத்து இஸ்லா மிய நாடுகளைச்சேர்ந்த அறிஞர் களும், கல்விமான்களும் கலந்து கொண்டுள்ளனர்.

# யாழ்.மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கைப் பேண பொலிசாரின் உதவியுடன் உரிய நடவடிக்கை எடுக்குக

## அரச அதிபர்-உதவி அரசாங்க அதிபர்களுக்குப் பணிப்பு

**யாழ்.குடாநாட்டில் முழுமையாக சட்டம், ஒழுங்கைப்பேண உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களில் பணியாற்றும் உதவி அரசாங்க அதிபர்களுக்கு யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.**

இவ் உத்தரவில் அவ்வப்பகுதி பொலிஸ் உயரதிகாரிகளை நேரில் அழைத்துப்பேச்சுக்களை நடாத்தும் படியும், அவர்களது ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணித்துள்ளார்.

அத்துடன் கிராமமட்டங்களில் சட்டம், ஒழுங்கைப்பேண முன்பிருந்தது போன்று கிராம சேவையாளர்களது சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "நல்லிணக்க சபைகளை" கிராமங்கள் தோறும் நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ள யாழ்.அரச அதிபர், கிராம இணக்க சபைகளை உருவாக்குமாறும் பணித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அதனை உடனடியாக அமுல்ப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

குடாநாட்டில் சட்டம், ஒழுங்கைப் பேணுவது தொடர்பாக கூட்டப்பட்டிருந்த அக்கூட்டத்தில் பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் அரச உயரதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (ஜ)

## வைத்திய[illegible] அமைப்பு

யாழ். பண்டத்தரிப்பில் உள்ள பிரம்பன் ஆற்றுப்பகுதியில் ஆரம்ப சுகாதார வைத்தியநிலையம்ஒன்றுஅமைக்கப்பட்டுவருகிறது.

மேற்படி பகுதியில் இவ்வாறான ஒருவைத்திய நிலைய[illegible] இல்லாதஇக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே இவ் வைத்திய நிலையம்அமைக்கப்பட்டுவருகிறது.(33)

# வடக்கு-கிழக்கு மாகாணஆளுநரை த.கூட்டமைப்பினர் விரைவில் சந்திப்பர்

(திருகோணமலை)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் எதிர்வரும் 11,12ஆம் திகதி களில் வடக்கு-கிழக்கு ஆளுநர் அசோகஜயவர்தனவை சந்திக்கவுள்ளனர். வடக்கு- கிழக்கு மாகாணசபைக்கு ஒதுக்கப்படும் நிதிகள் மற்றும் அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் போன்ற விடயங்களை வடக்கு-கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றவகையில் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளமையால் இந்தச்சந்திப்பிற்கு தாம் உடன்பட்டிருப்பதாக தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.இந்த இரண்டு நாள்அமர்வு திருகோணமலையில் நடைபெறவுள்ளது. இதில்நிதிகள்தொடர்பாக ஆராயப்படுகின்ற போதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகார கோரிக்கையுடன்இது எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை எனவும் அவர்குறிப்பிட்டார்.

# அடிப்படை வசதிகள்இன்றி இயங்கும் விசுவமடு குமாரசாமிபுரம் அ.த.க.பாடசாலை

(கிளிநொச்சி)

விசுவமடு குமாரசாமிபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எந்த விதஅடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருகின்றது.

நிலையான கட்டடங்கள் எவையும் இல்லாமல் தற்காலிகமாக சுண்ணாம்பினால் அமைக்கப்பட்ட சிறிய அதிபர் அலுவலகத்துடன் கொண்டமைந்த ஒரு கட்டடத்துடனும் கிடுகினால் வேயப்பட்ட ஒரு மண்டபத்துடனும் இப் பாடசாலை இயங்கி வருவதுடன் ஆண்களுக்கான கழிப்பறை கூட அமைக்கப்படாமல் உள்ளதுடன் பெண்களுக்கான கழிப்பறையும் தற்காலிகமாக சுண்ணாம்பினாலே அமைக்கப்பட்டுள்ளது.

5 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இப்பாடசாலைக் காணியில் தற்போது ஏறக்குறைய $2^1/_2$ ஏக்கர் அளவினதான காணியே பாடசாலைக்குரியதாக உள்ளது ஏனையவை மக்களால் பயன்படுத்தப்படுகிறது அதனால் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு இடப் பற்றாக்குறை நிலவுகின்றது.

90 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கும் இப்பாடசாலைக்கு 7 நிரந்தர ஆசிரியர்கள் தேவையான போதும் 1 நிரந்தர ஆசிரியரும், 1 தொண்டர் ஆசிரியரும், 1 பகுதிநேர ஆங்கில ஆசிரியருமே கற்பித்து வருகின்றதுடன் அதிபர் அவர்களும் கற்பிப்பதை காணக்கூடியதாக இருந்தது.

கஞ்சி தயாரிப்பதற்கு தடுப்பு சுவர்கள் இல்லாத ,சிறிய கொட்டில் உள்ளதுடன் களஞ்சியமாக அதிபர் அலுவலகத்தை பயன் படுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது அத்துடன் பாடசாலை வேலிகளிலும் முட்கம்பிகள் அகற்றப்பட்டு உள்ளதுடன் கால்நடைகள் மேய்க்கப்பட்டும் வருகின்றது. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து பாடசாலை வளர்ச்சிக்கு உதவுமாறு பாடசாலை அதிபர் எஸ். மகேந்திரன் அவர்கள் வேண்டியுள்ளார்.

## -யாழ்ப்பாண மாவட்டத்தில்-

# கிராமசேவையாளர் பற்றாக்குறையால் மக்களிற்கான செயற்பாடுகள் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் நிலவிவரும் கிராம சேவையாளர் கள் பற்றாக்குறையினால் மக்களிற்கான செயற்பாடுகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருவதாக யாழ்.செயலகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டம் 435 கிராம சேவையாளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகளுக்கென 435 கிராம சேவையாளர்கள் தேவைப்படுகின்றனர். எனினும் தற்போது 358 கிராமசேவையாளர்களே கடமையாற்றி வருகின்றனர். 77 கிராம சேவையாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளநிலையில் அவை நீண்ட காலமாக அரசினால் நிரப்பப்படாது உள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உள்ள பதவி வெற்றிடம் மொத்த தேவையின் 18% த்தினை அண்மித்துள்ளதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வெற்றிடமாக உள்ள பிரிவுகளுக்கு ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள நியமிக்க மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக அரசினால் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை யெனவும் தெரியவருகின்றது.

அத்துடன் கடந்த ஆண்டில் இவ்வாறான வெற்றிடங்களுக்கென மீள் நியமனம் செய்யப்பட்ட 30 ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்களையும் ஒருவருடகாலத்தின் பின் சேவையினின்று அரசு இடைநிறுத்தியுள்ளது. முக்கியமான விடயமாகும். (27)

# நியாப் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட நியாப் திட்டத்தின் 2ஆம் கட்டவேலைகள் தொடர்பான சிறப்புக்கலந்துரையாடல் ஒன்று கடந்த 3ஆம் திகதி முல்லை. மாவட்ட நியாப்திட்டப் பணிப்பாளர் சிவகுமார் தலைமையில் ஆரம்பமானது.

வீதி புனரமைப்பு, விவசாயச் செய்கை,குளம் திருத்துதல் போன்றவற்றிக்கு நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை இவ்வருடம் மிகவும் விரைவாக 2ஆம் கட்ட வேலைகள் நிறைவு பெற உதவவேண்டும் என்றும் திட்டப்பணிப்பாளர் சிவகுமார் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை. மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர்.கரிகாலன், த.பொ.மே.நி. துணைப் பொறுப்பாளர் மதன் ராஜ், முல்லை.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசை யமுதன், அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா-சுகுமார், நீர்ப்பாசனத் திட்டப்பணிப்பாளர், முல்லை. மாவட்டத்திலுள்ள உதவிஅரச அதிபர்கள், கமநல அபிவிருத்தி திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர், ஆலோசனை பொறியியலாளர்கள், பிரதி மாகாண விவசாயத்துறைப் பணிப்பாளர் வே.சுப்பிரமணியம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பெரும்பாக உத்தியோகத்தர்கள், எனப்பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

முதல் கட்டுமானவேலை திட்டங்கள் தொடர்பான ஆராய்வுக் கலந்துரையாடலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (20)

# முல்லை. கிராமிய அபிவிருத்தி வங்கியில் 60 பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

2004 சிறுபோக உபஉணவு கடன்வழங்கல் தொடர்பாக பயனாளிகளுக்கு முல்லைத்தீவு கிராமிய அபிவிருத்தி வங்கியினரால் ஒன்று கூடலொன்று நடாத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு கடந்த 4ஆம் திகதி காலை 10.00 மணியளவில் ஒட்டுசுட்டான் வெளிக்கள அலுவலர் ச.சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதேச இணைப்பாளர் வே.தயாபரன், முல்லை கிராமிய அபிவிருத்தி வங்கியின் மேலாளர் இ.கமலக்கண்ணன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினர். இதில் 60 பேருக்கு 10.000 ரூபா தொடக்கம் 25.000 ரூபா வரை கடன்வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதால் பயனாளிகள் அனைவரையும் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (05)

# நிக்கொட்டினால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் திறப்பு விழா

(திருகோணமலை)

திருகோணமலை-நிலாவெளி வீதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த கிராமமான இக்பால்நகரில் சித்தூர் முஹம்மதியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் "நிக்கொட்" அமைப்பினால் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தை ஜேர்மன்தொழில் நுட்பநிறுவனத்தின் (ஜிரிஇஸட்) இலங்கை வதிவிடப்பிரதிநிதி டாக்டர் றோலண்ட் ஸ்ரூறர் அண்மையில் திறந்து வைத்தார் இந்நிகழ்வில் கௌரவவிருந்தினராக நிக்கொட் திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன்,விசேடவிருந்தினர்களாக திருமலை வலயக்கல்விப் பணிப்பாளர் கு.திலகரத்தினம்,திருமலை மாவட்டப் பாடசாலை வேலை கள் பொறியியலாளர் பி.பேராசிரியன் ஆகியோர்பங்கு பற்றி னர்ஆரம்பத்தில் அதிதிகள் உவர் மலை விவேகானந்த கல்லூரி பாண்ட் இசையுடன் அழைத்துச்செல்லப்பட்டனர்.

டாக்டர்றோலணட் ஸ்ரூறர் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். பின்னர்நடைபெற்ற கூட்டத்தில் பாடசாலை அதிபர் ரி.அக்பர் பேசுகையில்",வன்செயல்களின் போது இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியிருந்த 300க்கும்அதிகமான குடும்பங்கள் இப்போது மீளக் குடியமர்ந்து வருகின்றன.சுமார் 200 பிள்ளைகள்படிக்கின்றனர். முதல்த் தடவையாக இவ்வாண்டு தான் இப்பாடசாலையிலிருந்து ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவிக்கின்றனர். தளபாடத் தட்டுப்பாடு நிலவுகின்றது. முக்கியபாடங்களை போதிப்பதற்கு தேவையான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகிறது." என்று தெரிவித்தார். நிக்கோட் திட்டப்பணிப்பாளர் லங்காநேசன் பேசுகையில் "பிள்ளைகளின் கல்வியில் தாய்மார்அக்கறை செலுத்த வேண்டும் என்றார். பெண்குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவதால் ஒரு சமுதாயமே உயர்ச்சியடையும்'' என்றார் வலயக்கல்விப்பணிப்பாளர் திலகரத்தினம்,ஆசிரியர் என்.அப்துல்லா ஜிரிஇஸட் வதிவிடப்பிரதிநிதி டாக்டர்றோலண்ட் ஸ்ரூறர் மற்றும் பலர் பேசினர் உபஅதிபர் திருமதி கே.சிங்காரம் நன்றி கூறினார்.

## கரைதுறைப்பற்று உ.அ.அதிபர் அலுவலகத்தில்

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் உதவி அரச அதிபர் செயலகத்தில் 05.06.2004 காலை 10.00மணிக்கு நடைபெற்றது. இதில் பெருமளவான வேலையற்றபட்டதாரிகள் கலந்து கொண்டனர் அவர்



களின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு போட்டோ பிரதிகள் எடுக்கப்பட்டது என நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டபட்டதாரிகள் தெரிவித்தனர். தமக்கு வேலை கிடைத்த மகிழ்ச்சி அவர்களின் முகங்களில் தெரிந்ததை அவதானிக்க முடிந்தது. (20)

# தமிழரின் வாழ்வியல் கட்டுமானங்களைச் சிதைக்க எதிரி சமூகச் சீரழிவைத் தூண்டுகிறான்

## -யாழ்.நிலைமை குறித்து பொறுப்பாளர் கலைவிழி

(யாழ்ப்பாணம்)

**"ஆயுதப்போர் ஓய்ந்துள்ள தற்போதைய சூழ்நிலையிலும் சமூகசீரழிவுகளைத் தூண்டிவிட்டு எமது இனத்தை அழிவுப் பாதையில் இட்டுச்செல்வதன் மூலம் தமிழ் மக்களின் வாழ்வியல் கட்டுமானங்களை பலவீனப்படுத்தும் முயற்சியில் எதிரி தீவிரமாக ஈடுபட்டுவருகிறான்."**

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்.நல்லூர் பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி தெரிவித்துள்ளார்.

தமிழினம் இன்று தனது விடுதலைப் பயணத்தில் வீறுநடை போட்டு வெற்றிவாகை சூடி நிற்பதற்கு தமிழ் மக்கள் கொண்டுள்ள அரசியல் விழிப்புணர்வுகளும், மக்களின் ஸ்திரமான வாழ்வியல் கட்டுமானங்களுமே காரணம்.

எனவே இதனை உணர்ந்துள்ள எதிரிகள் கலாசார சீரழிவுகளையும், சமூக சீரழிவுகளையும் எமது மண்ணில் தூண்டிவிட்டு மக்களின் வாழ்வியல் கட்டுமானங்களை பலவீனமடையச் செய்வதன் மூலம் தமிழ் மக்கள் கொண்டுள்ள அரசியல் விழிப்புணர்வுகளையும், தேசவிடுதலைப் பற்றுணர்வுகளையும் பலவீனப்படுத்திவிட முனைகின்றனர்.

எனவே எமது இனத்தின் ஒட்டுமொத்தமான விடுதலையைக் கருத்திற்கொண்டு எதிரியின் இத்தகைய கபடத்தனமான சூழ்ச்சிகள் குறித்து யாழ்.குடாநாட்டு இளம்சமூகம் விழிப்புடனும், தெளிவுடனும் செயற்படவேண்டும். அத்துடன் சமூகநலன் பேணிச்செயற்படும் இளையவர்களுக்கு சமூகஅமைப்புக்கள் ஆதரவு வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## கல்வி அமைச்சு தீர்மானம்

சுகாதார அமைச்சினால் போசாக்கு தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாணம்உட்பட நாடு பூராவும் மேற்கொண்ட ஆய்வில் 42 கல்வி வலயங்களில் 14 ஆயிரத்து 300 முதலாம் தர மாணவர்களுக்கு இரண்டாம் கட்ட போசாக்குணவு வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# யாழ்.இல் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க நடவடிக்கை


## அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய தொழிற் பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளை அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவருகின்றது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களிலும், இடப்பெயர்வுகளிலும் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டின் இளம் சமுதாயத்தினது வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இத் தொழிற் பயிற்சித்திட்டம் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தட்டச்சு, வர்ணம் தீட்டுதல், இலத்திரனியல் உபகரணங்களைத் திருத்துதல், புத்தகம் கட்டுதல், தையல் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன. (33)



பாடசாலை மாணவர்களுக்கான உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டப் பிரதேச மட்டப்பயிற்சிப்பட்டறை நிகழ்வு நேற்று முன்தினம் முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது (படம் சோதி-வரன்)

# தற்போதும் மரநிழலில் கல்விகற்கும் நிலையில் கிளி.முரசுமோட்டை றோ.க.அ.த.க.பாடசாலை மாணவர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க அ.த.க. பாடசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்கள் ஆலமரத்தின் கீழும் பனைமரத்தின் கீழும் அமர்ந்து கல்வி கற்று வருவதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி பாடசாலையில் போதிய கட்டடவசதிகள் இன்மையே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரியவந்துள்ளது.



ஆரம்பப் பாடசாலை

மாணவர்களுக்கென 40x20 அடி கட்டடம் ஒன்றும் மற்றைய மாணவர்களுக் கென சிறிய இரு கட்டடங்களுமே அமைக்கப் பெற்றுள்ளன.

ஆரம்பப்பிரிவில் 180 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இக்கட்டடத்திற்குள் இரண்டு வகுப்பு மாணவர்கள் மட்டுமே கல்வி கற்கமுடியும். இந்த நிலையில் மற்றைய மூன்று வகுப்பு மாணவர்களும் ஆலமரத்தின் கீழும் பனைமரத்தின் கீழும் அமர்ந்தே கல்விகற்க வேண்டிய அவல நிலைக்குள்ளாகியுள்ளனர்.

மற்றும் இப்பாடசாலை அதிபருக்கெனஒருகாரியாலயமோ மற்றும் விஞ்ஞான ஆய்வு கூட வசதியோ நூல்நிலையமோ அற்ற நிலையில் வகுப்பறைகளில் வைத்தே பாடசாலை அதிபர் தனது அலுவலக கடமைகளையும் விஞ்ஞான ஆசிரியர் வகுப்பறைகளில் இருந்தே விஞ்ஞான ஆய்வு கூட செயற்பாட்டு கற்பித்தலையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கென மேசையோ, கதிரையோ அற்ற நிலையில் பாடசாலை மாணவர்களின் மேசை கதிரைகளில் அமர்ந்தே தங்கள் பணிகளை மேற்கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது

மற்றும் சிறார்களுக்கான இலைக்கஞ்சி வழங்கல் செயற்பாடுகள் யாவும் மரநிழலின் கீழ் இடம் பெற்றுவருவதன் காரணமாக மாணவர்கள் தினம்தினம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவருகின்றனர்.

குறிப்பாக எந்த வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மேற்படி பாடசாலை தற்போதைய காலகட்டத்திலும் இயங்கி வருகின்றது என்பது கவலைப்பட வேண்டியதொன்றாகும். (சோ.கு)

# முல்லை. கட்டம் 1 வைத்தியசாலையில் கடந்த மாதம் 4760 பேருக்கு சிகிச்சை

முல்லைத்தீவின் நகரப்பகுதியில் அமைந்துள்ள முல்லை. மாவட்ட கட்டம் ஒன்று வைத்திய சாலையில் மே மாதத்தில் 4760 வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெற்றோர் 229 பேர் மேலதிக சிகிச்சைக்காக வேறுவைத்திய சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டோர் 35 பேர், பிறப்பு-05, இறப்பு எதுவும் நிகழவில்லை.

மலேரியாநோயின் தாக்கத்திற்கு 303 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றனர்.

இருந்தபோதும் விடுதியில் தங்கி நின்று சிகிச்சைபெறுவோர் பெரும் இடநெருக்கடியினையும், இன்னல்களையும் சந்திக்கின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியில் 20 கட்டில்கள் போடுவதற்கான விடுதி அமைக்கப்பட்டிருந்தும் வேலைகள் முடிவுறாததினால் அங்கு செயல்பாடுகள் நடைபெறவில்லை. ஒரு நாளைக்கு இவ் வைத்தியசாலைக்கு சுமார் 100 பேருக்கு மேல் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைபெற வருவதை அவதானிக்க முடிகிறது. (20)

# உலக வங்கியின் 25 வீட்டுத்திட்ட ஆரம்பப்பணி மட்டுவிலில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சியில் உள்ள மட்டுவில் மத்தியில் 25 வீட்டுத் திட்டம் ஒன்றை உலக வங்கி அமுல் செய்ய ஆரம்பித்துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும்இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இவ்வீட்டுத் திட்டம் அமுல்செய்யப்படவுள்ளது.

துரிதமாக நடைமுறைப் படுத்தப்படவுள்ள இவ்வீட்டுத் திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வாறு உலக வங்கியினால் அமைக்கப்படும் வீடுகள் மேற்படி பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.(33)

# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நயினாதீவில் உள்ள நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் சிறப்பானமுறையில் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 03 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இவ் உற்சவ காலத்திற்கான சிறப்பான கடல் போக்குவரவு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. அந்தவகையில் விழாக் காலத்தில் அடியார்களுக்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் நயினாதீவு ஆலயசூழலில் சுகாதாரவசதிகள், மின்சாரவசதிகள், தொலைத்தொடர்புவசதிகள், குடிநீர்வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக் கைகளை யாழ். அரசசெயலகம் மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது. (33)

# தெற்கில் பாவித்துக் கழித்த மினிபஸ்கள் சேவையில் பரிசோதித்து தரக்கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துக

## யாழ்.ம.உ. மே. பாதுகாத்தலுக்கான குழுகோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென் பகுதிகளில் பாவித்துக் கழித்த மினிபஸ் வண்டிகள் யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால் அவற்றினை பரிசோதனைக்கு உட்படுத்தி தரக்கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட மனிதஉரிமைகள் மேம்படுத்தலும் பாதுகாத்தலுக்குமான குழு யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் மற்றும் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது,

தென்பகுதிகளில் மக்களின் போக்குவரத்துச் சேவைக்கு ஈடுபடுத்தப் பொருத்தமற்றதாகக் கருதப்படும் மினிபஸ் வண்டிகளை மலிவு விலைக்கு கொள்வனவு செய்து வந்து யாழ்குடாநாட்டில் போக்குவரத்து சேவையில்ஈடுபடுத்தி வருகின்றனர். இதனால் குடாநாட்டில் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. எனவே தென் பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் பாவித்துக் கழித்த பஸ் வண்டிகளை பரிசோதனைக்குட்படுத்தி தரத்தினை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்டாவளை உதவி அ.அ. பிரிவு பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு

(அலுவலகசெய்தியாளர்)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான தேர்முகத் தேர்வு எதிர்வரும் 11.06.2004 வெள்ளி காலை 9.30 மணிக்கு கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. எனவே நேர்முக அழைப்புக் கடிதம் கிடைத்தோரும், கிடையாதோரும் இந்நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு கண்டாவளை பிரதேச உதவி அரசாங்க அதிபர் சி.சிவசொரூபநாதபிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். (சோ,கு)

# ஆசிரியர், வளப்பற்றாக்குறையால் பின்தங்கியுள்ள கல்விநிலை

பெரும் போரையும் போரின் வடுக்களையும் தாங்கி நிற்கின்ற தமிழர் தாயகப் பகுதிகளில் இன்று மலர்ந்துள்ள இரண்டரை வருடகால சமாதானத்தில் மீள் குடியேற்றம், மீள்கட்டுமானம், பொருளாதார வளர்ச்சி என்பன ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கின்றன. இதே போன்றுதான் தமிழ் மாணவர்களின் கல்வியும் கடந்த காலங்களில் பௌதீகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சிதைக்கப்பட்டது போன்று இச் சமாதான காலத்திலும் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை, சீருடை வழங்கப்படாமை, ஒழுங்காக பாடநூல்கள் விநியோகிக்கப்படாமை, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்படாமை போன்ற இடர்களின் மத்தியில் தமிழர் தாயகப் பகுதிப் பாடசாலைகள் இன்றுவரை இயங்கிவரு கின்றன.

அந்த வகையில் மிக முக்கியமான கல்வி வலயத்தில் 36 ஆரம்ப ஆங்கில ஆசிரியர்களும், 23 இடைநிலை கல்வி ஆசிரியர்களும் தேவையான நிலையில் 03 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 89ஆரம்ப ஆங்கில ஆசிரியர்களும், 24 இடைநிலை கல்வி ஆங்கில ஆசிரியர்களும் தேவையான நிலையில் 08 ஆங்கில ஆசிரியர்களும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 57 ஆரம்பக்கல்வி ஆங்கில ஆசிரியர்களும் 64இடைநிலைக்கல்வி ஆங்கில ஆசிரியர்களும் தேவையான நிலையில் 17 ஆங்கில ஆசிரியர்களும் துணுக்காய் கல்வி வலயத்தில் 56 ஆரம்பக்கல்வி ஆங்கில ஆசிரியர்களும், 35 இடைநிலைக்கல்வி ஆங்கில ஆசிரியர்களும் தேவையான நிலையில் 05 ஆங்கில ஆசிரியர்கள் மட்டும் உள்ளனர். கிளிநொச்சி கல்வி வலயத்தில், 98 ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியர்களும் 116 இடைநிலைக்கல்வி ஆங்கில ஆசிரியர்களும் தேவையான நிலையில் 14 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இதேபோன்றுதான் ஏனைய முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவிவருகின்றன. இந்த 05 கல்வி வலயங்களிலும் உள்ள 71956 மாணவர்களுக்கும், 598 ஆங்கில ஆசிரியர்கள் தேவையான நிலையில் 47 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். ஏனைய 551 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள 87 பாடசாலைகளில் 86 பாடசாலைகள் ஜெயசிக்குறு படைநடவடிக்கை மூலம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் தற்போது தற்காலிகக் கொட்டகைகளில் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் புதிய கட்டடப்பணிகள் ஆமை வேகத்தில் நகர்த்திச் செல்லப்படுகின்றன.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளும் இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் உள்ளன. இதேபோன்று மடுகல்வி வலயத்தில் உள்ள 41 பாடசாலைகளில் 36 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. ஏனைய 05 பாடசாலைகளும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயம், சூனியப்பிரதேசம் இராணுவ முகாம் என இராணுவ ஆக்கிரமிப்பால் இன்றுவரை இயங்கமுடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறு 05 பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையிலும் இக் கல்வி வலயத்தில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

முல்லைத்தீவு கல்விவலயத்தின் முன்னணிப் பாடசாலையாக விளங்கிய பாட

உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒரே தடவையில் 5மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகினர். அத்தோடு பல்வேறு போட்டிகளில் கூட பெரு வெற்றி



களை ஈட்டிய இப்பாடசாலை இன்று ஆசிரியர் வளப்பற்றாக்குறை,விஞ்ஞான ஆய்வு கூடமின்மை,விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள் போதியளவு இன்மை கழிப்பறைவசதிகள் இன்மை எனப்பெரும் இடர்களின் மத்தியில் இயங்கி வருகின்றன.

இன்று தமிழர் தாயகப் பகுதிப் பாடசாலைகள் 51 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலும் சிங்களமொழிப் பாடசாலைகள் 21 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலும் ஆசிரியர் வளம் காணப்படுகின்றது.

பிரச்சினையாக அமைவது ஆசிரியர் பற்றாக்குறை என்பது இன்று நேற்று அல்ல, 25வருடகாலத்திற்கு மேலாக இவ் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருகின்றது.

தமிழீழ தாயகப் பகுதிகளில் அவ்வப்போது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றப் பிரதேசங்களில் 293 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள், நவீன கட்டட வசதிகள், தகவல் தொழில்நுட்ப வசதிகள் என ஆரம்பப் பாடசாலைகள் கூட தேவைக்கு அதிகமான வளங்களுடன் இயங்கி வருகின்றன. இது தமிழர் தாயகப் பகுதியில் முற்றுமுழுதாக மாறுபட்டுக் காணப்படுகின்றன. இங்குள்ள ஆசிரியர் வளம் என்பது 30 வீதமான வளம் என்றே கூறவேண்டும். மடு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய 05 கல்வி வலயங்களிலும் 71956 மாணவர்கள் கல்விகற்று வருகின்ற நிலையில் பாடரீதியாக பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

உலகத்தின் இரண்டாவது மொழியாகக் கொள்ளப்படும் ஆங்கிலமொழியும் ஆசிரியர் வளமும் 10 வீதம்கூட இல்லை என்றே கூறவேண்டும். அந்தவகையில் மடு

சாலைகள் மிக மோசமான வளப்பற்றாக் குறைகளுடன் இயங்கிவருகின்றன. இதே போன்று துணுக்காய் கல்விவலயத்தில் உள்ள பாடசாலைகள் பற்றி நோக்கும் போது மாங்குளம் ஏ.9வீதியை மையமாகவைத்து ஒட்டுசுட்டான், ஒதியமலை, மாந்தைகிழக்கு, கோட்டைகட்டி என பாரிய பிரதேசங்களின் பாடசாலைகளை உள்ளடக்கி இக்கல்வி வலயம் காணப்படுகின்றது.இவ்வலயத்தில் உள்ள மாந்தை கிழக்கு கோட்டத்தில் உள்ள பாலைப்பாணி, சிறாட்டிக்குளம், மூன்று முறிப்பு,இளமருதன்குளம், பனங்காமம், பொன்னகர்ஆகிய பிரதேச பாடசாலைகள், அதிபர் உடன் அல்லது இரு ஆசிரியர்களுடன் இயங்கிவருகின்றன. இவர்கள் வேறு பாடசாலைகளுக்கு செல்வதாயின் எந்த ஒரு போக்கு வரத்து வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றன.

இக் கோட்டத்தில் முன்னணிப்பாடசாலையாக விளங்கிய பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்,ரணகோஷ படை நடவடிக்கை மூலம் இன்று ஒரு பின்தங்கிய பாடசாலையாகக் காட்சியளிக்கின்றது. 1999 ஆம் ஆண்டிற்கு முன்னர் கல்விப் பொதுத் தராதர

**சு.பாஸ்கரன்**
**பாண்டியன்குளம்**

சிங்களப்பாடசாலைகளும் பாடசாலை வளங்களும் மேலும் மேலும் விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழர் தாயகப்பாடசாலைகள் மரங்களின் கீழ் பாழடைந்த தற்காலிக கொட்டகைகள் என்பவற்றின் கீழ் ஆசிரியர் வளம் இன்மை, அடிப்படை வசதியின்மை எனப் பெரும் இடர்களின் மத்தியில் இயங்கிவருகின்றன.

கட்டடப் புனரமைப்பு பணிகள் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கின்றன. தகவல் தொழில் நுட்ப விருத்தி என்ற பெயரில் பெரும்பாலான பாடசாலைகளுக்கு மின்பிறப்பாக்கிகள் வழங்கி கணினிகள் வழங்காமை, கணினி வழங்கி மின்பிறப்பாக்கி வழங்காமை காணப்படுகின்றன. ஏன் இவ்வருட ஆரம்பத்தில் வழங்கப்பட வேண்டிய பாடப்புத்தகங்கள் கூட இதுவரை முழுமையாக வழங்கப்படாமலும், தமிழ்ச்சமூகத்தின் கல்வி காலம் காலமாக மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன.

---

## பயன்தரு மரக்கன்றுகள் விநியோகிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் பயன் தரு மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

உலக சுற்றுச் சூழல்தினத்தை ஒட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள பொது நிறுவனங்களுக்கு இம் மரக்கன்றுகள் விநியோகம் செய்யப் படவுள்ளன.

சுற்றுச்சூழலின் சமநிலையைப் பாதுகாக்கும் விதமாக மர நடுகையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள இம் மரக் கன்றுகளைப் பெற்றுப்பயன் பெற விரும்பும் யாழ்.மாவட்டத்திலுள்ள பொதுநிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படவுள்ளது. (33)

## அநுராதபுரத்தில் டெங்கு தீவிரம்

அநுராதபுர மாவட்டத்தில் டெங்குநோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. அதுமட்டுமன்றி வயிற்றோட்டம், செங்கமாரி போன்ற நோய்களும் தீவிரமாகப்பரவி வருகின்றது. டெங்குநோய் பரவும் வேகத்தைப் போலவே வயிற்றோட்டமும் பரவி வருகின்றது. கூடுதலாக மூன்று வயது தொடக்கம் 10 வயது வரையிலான பிள்ளைகளையே தாக்கி வருகின்றது.

## ஊடகவியலாளர் சங்க நிர்வாகிகள் தெரிவு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் புதிய தலைவராக கா.இரத்தினசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கடந்த ஞாயிறு காலை திருகோணமலை சங்கமித்த மாத்திரிகர் வீதியில் நடந்தது. அப்போது புதிய நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு: உபதலைவர்கள். எச்.ஏ.தர்மதாஸ, முகமட்சாலி. செயலாளர் சிசசிக்குமார், உபசெயலாளர் மங்கள நாத்லியனாராச்சி, பொருளாளர் எம். முஸம்மில் (நிர்வாக சபை:- ஜோர்ஜ் டேவிட், அ.பரசுராமன், பொ. சற்சிவானந்தம், ஏ.எல். ரபாய்தீன் பாபு கே.டி.விஜயபால,எஸ்.சுகிந்தராஜன் முஹமட் அஸ்ஹரர். (25)

## ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திக்கு சி.பாதுகாப்பு நிதியம் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான பாதுகாப்பு நிதியம் 26 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 15 ஆரம்ப பாடசாலைகளில் இந்நிதி உதவிமூலம் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாதிக்கப்பட்ட ஆரம்பக் கல்வி பாடசாலைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதைமையமாகக் கொண்ட இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் சிறுவர்கள் பயனடைவர். (33)

## உந்துருளி சாரத் அனுமதிப்பத்திரம் கிளி. யில் வழங்க நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கடந்த வருடம் ஐப்பசி மாதம் 15, 16 ஆம்.திகதிகளில் கிளிநொச்சி வாகன போக்குவரத்து கிளையினரால் நடாத்தப்பெற்ற மோட்டார் சைக்கிள் (உந்துருளி) சாரதி அனுமதி பத்திரத்துக்கான பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கு வெகுவிரைவில் செயன்முறைப்பரீட்சை நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

எனவே மேற்படி பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்கள் அனைவரும் உரிய கட்டணங்களை கிளிநொச்சி அரச செயலக வாகனப் போக்குவரத்துக் கிளையில் செலுத்தி விண்ணப்பங்களை புதுப்பித்துக் கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ.கு)

## முரசுமோட்டை பொதுநூலகத்தில் வாசகர்களுக்கு இடப்பற்றாக்குறை

(அலுவலக செய்தியாளர்)

முரசுமோட்டை பொது நூலகத்தில் வாசகர்கள் இடவசதி இன்றி நெருக்கடிக்குள்ளாக்கப்படுகின்றனர்.

கிளிபிரதேச செயலகத்தின் உப செயலகத்திற்குள் அமைந்துள்ள இந்த பொது நூலகத்தில் நூல்கள் அடங்கிய அறையும் வாசகர் படிக்கும் அறையும் ஒன்றாக இருப்பதால் வாசகர்களுக்கு பல இடர்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்நூலகத்தில் 449 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்களுடன் ஏனைய வாசகர்களும் இந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். நூல்கள் போதியளவு இருந்தும் அதனை பின்பற்றுவதற்குரிய இடவசதியே போதாது எனவும் தற்போது இருக்கின்ற கட்டம் குண்டுவெடிப்பின் காரணமாக உடைந்த நிலையில் உள்ளதென்றும் நூலக அதிகாரி தெரிவித்துள்ளார். (சோ.கு)


தமிழர் தாயகத்தின் ஒரே ஒரு தேசிய நாளிதழாக
இன்று யாழ் மண்ணில் பாதம் பதிக்கும்
ஈழநாதம்
மக்கள் நாளிதழுக்கு
எமது வாழ்த்துக்கள்!
JAFFNA HINDU COLLEGE


Smart Prints (Pvt) Ltd.
ALL KIND OF PRINT SOLUTION CENTRE
General & Commercial Off-set Printers & Screen Printers
Computer Designers
High Quality Production
புத்தகங்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், மற்றும் பல...
717, K.K.S. Road, Jaffna.
0776 038312
0712 336767


உன்னத கலைநயம் மிக்க
தரமான 22 கரட் தங்கநகைகளை
அழகிய வடிவங்களில்
செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Geetha Jewell House
கீதா ஆபரண மாளிகை
கண்டி வீதி, சாவகச்சேரி
T.P. 0777-737336


YAMAHA
Touching Your Heart
Castrol
யாழ் நகரில் உள்ள - சர்வதேச புகழ் பெற்ற
ஒரே ஒரு மோட்டார் கொம்பனி
யமஹா மட்டுமே !!
YAMAHA 15
அகில உலகின் தலைசிறந்த
யமஹா மோட்டார் சைக்கிள்கள்
வெளி இணைப்பு இயந்திரங்கள்
கெல்மெட்டுக்கள் மற்றும்
காஸ்ரோல் எஞ்சின் ஓயில்களை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே ஒரு இடம்
யமஹா பிளாஸா மட்டுமே!!
YAMAHA
GENUINE
Parts & Accessories
YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna. 021 4590 200. www.yamahaplaza.com




# பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 20%-50% வரையிலான கழிவுகள் பாடப் புத்தகங்களுக்கு வழங்கப்படும்.

## உங்கள் பிள்ளைகளுடன் இன்றே விஜயம் செய்யுங்கள்

மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்கள், புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தர உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் அழிபொருட்கள் வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், அலுவலக அலுமாரிகள், மேசைகள், பயில் அலுமாரிகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள் O.H.P புறஜெக்ரர், றோணியோ மெசின், மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள், தொலைநோக்கி கருவிகள் (வானியல்), நுணுக்குக் காட்டிகள், கணனி நூல்கள் மற்றும் அறிவமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

# ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0212225542
(சி:9910)

---

ஹாட்வெயர் பொருட்கள், பொதிகள்
போக்குவரத்து சேவைகளுக்கு

# மதுஜா ரேடர்ஸ்

154, கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P. 060 2213130

# SNJ ரவல்ஸ்

யாழ்ப்பாணம் கொழும்பு பயணிகள்
போக்குவரத்து சேவையும்.
ஆசனப்பதிவுகளும் மேற்கொள்ளப்படும்.

154, கண்டி வீதி,
சாவகச்சேரி.
T. P. 060 2213130

240, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
T.P.O21 - 2222837

160, புளுமென்ரல் வீதி,
கொழும்பு 13
T.P.0112-321449, 0777666014
(சி:9912)

---

சாவகச்சேரி நகரில்
உங்களுக்குத் தேவையான
கட்டடப்பொருட்கள், இரும்புக் கம்பி வகைகளை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# கதிரவன் இரும்பகம்

104, கண்டி, வீதி, சாவகச்சேரி
(சி:9911) T.P. 0212225865

---




துணிவகைப்பிறிண்டிங் - பெனா, ரை, T-சேட் எம்போசிங் பிறிண்டிங் போன்றவற்றையும், ஸ்கிறீன் பிறிண்டிங்-நிறுவனங்களின் விளம்பரப்பெயர்ப்பலகைகள் (பிரபல ஓவியர் கோபால் பட்டாவி அவர்களின் பங்களிப்புடன்) பெரிய அளவிலான சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்கள், கலண்டர்கள், அழைப்பிதழ்கள், விசிற்றிங் காட் போன்றவற்றையும் ஒவ்செட் பிறிண்டிங்-புத்தகங்கள் (பிரபல ஓவியர் இராசையா அவர்களின் ஓவியப்பங்களிப்புடன்) சிட்டைப்புத்தகங்கள், நினைவு மலர்கள் போன்றவற்றையும் மற்றும் லெற்றப்பிறஸ்-வேலைகளையும் ஒரே இடத்தில் அழகுற அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள

# NOBLE *printers*

# நோபிள் பிறிண்டேர்ஸ்

(சி-9825)

103, palaly Road, Jaffna    Reg. NAL/DS/625    Mobile: 0777-145399

# 31



மட்டக்களப்பு மாவட்டத்தின் மூத்த பத்திரிகையாளரும், 2000 ஆம் ஆண்டில் சிறந்த பத்திரிகையாளராகத்தெரிவுசெய்யப்பட்டவருமான ஜி.நடேசன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

➡ ஜி.நடேசனுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டுப் பற்றாளர் எனும் நிலையை வழங்கிக் கௌரவித்தனர்.



படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜி.நடேசன்

➡ களுத்துறை மாவட்டத்தின் புளத் சிங்களத் தேர்தல் தொகுதியிலுள்ள பில்கந்த தோட்டத்தில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 20 பேர்காயம். 10 வீடுகள் சேதம்.

➡ அரசியல்துறை பொறுப்பாளரைச் சந்தித்த மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் இடைக்கால நிர்வகத்தை அமைப்பதன் மூலமே தமிழ் மக் களின் நம்பிக்கையைப் பெறமுடியும் எனத் தெரிவித்தார்.

➡ கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங் களுக்கான கட்டடத்திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் அலுவலகம் புதிதாக அமைக்கப்பட்டு திறக்கப்பட்டது.

➡ மூன்று நாள் விஜயத்தினை மேற் கொண்டு இலங்கைவந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் லிக்கியுன் ஜின் சனாதிப தியைச் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

➡ கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலவரம் குறித்தும் புதிய இராணுவத்தளபதி நியமனம் தொடர்பாக இராணுவத் தலைமை அதிகாரியும், கிழக்குப்பகுதிக் கான விசேட நடவடிக்கை தளபதியுமான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை சனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

# 01.

➡ நாட்டுப்பற்றாளரும் ஊடகவியலாளருமான ஜி.நடேசனுக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் ஊடகத் துறையைச் சார்ந்தோரும், அரச அரச, சார்பற்ற நிறு வனங்களைச், சார்ந்தோரும், போராளிகள், பொதுமக்கள் எனப்பலரும் அஞ்சலி செலுத்தினர்.




ஜி.நடேசனுக்கு மக்கள் அஞ்சலி

➡ இலங்கை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் மூன்றாவது ஆசிய முதலீட்டு மாநாடு கொழும்பில் ஆரம்பமாகியது.

➡ மட்டக்களப்பு மாவடி முன்மாதிரிக் கோட்டத்தில் உள்ள மண்டூர் அரசியல் துறைப் பணிமனை மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டது.

➡ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹறோல்டிடம் சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டினை எடுத்துக் கூறினார்.




# 2

➡ மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், தளபதிகளான ராம், ஜெயார்த்தன், மட்டு- அம்பாறை பொறுப்பாளர் கௌசல்யன் சமாதானச் செயலகத்தை சேர்ந்த பவானந்தன் ஆகியோர் கிழக்குப் பிராந்திய தளபதியும், இராணுவத்தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட தலைமையிலானஅதிகாரிகளைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்தி இயல்பு நிலைமையை கொண்டுவருவது தொடர்பாக ஆராய்ந்தனர்.

➡ தமிழக அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் சமகால நிகழ்வுகள் குறித்து கலந்துரையாடினார்.

# 3

➡ திருகோணமலை மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசமான மூதூர் பாட்டாளிபுரத்தில் திலீபன் மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது.



பாட்டாளிபுரத்தில் திலீபன் மருத்துவமனை

➡ இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் மாவட்டத்தலைமை கண்காணிப்பாளர் பேபடுக்கஸ்மெஸ்சின் முன்னிலையில் தமிழீழவிடுதலைப் புலிகள் தரப்பில் நகர அரசியல்துறைப்பொறுப்பாளர் சேனாதி தலைமையிலான குழுவினரும் பாதுகாப்புப் படைத்தரப்பில் 233வது படைப்பிரிவு கடற்படை அதிகாரி கேணல் லஷ்சிறி அமரதுங்க தலைமையிலான குழுவினரும் சந்தித்து மட்டக்களப்பு நிலவரம் தொடர்பாக கலந்துரையாடினர்.

# 4

➡ அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தங்ககத்தை தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் திறந்து வைத்து மூதாளர்களுக்கு அன்புப் பரிசில்களையும் வழங்கினார்.

# 5

➡ அரசியல் துறைப்பொறுப்பாளரும் கூட்டமைப்பினரும் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் குறித்தும் கலந்துரையாடினர்.



அரசியல்துறைப்பொறுப்பாளர் த.கூட்டமைப்பினர் சந்திப்பு

➡ இளைஞர் விவகார பிரதியமைச்சர் ஸ்ரீபதிசூரியாராச்சியின் மெய்ப்பாது காவலரும் அவரது ஆதரவாளரும் தளு கமவில் உள்ள அமைச்சரின் அலுவலகத் திற்கு அருகில் வெள்ளை வானில் வந்தோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# 6

➡ தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் சம்பந்தமாக ஏகோபித்த கருத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சார்க் நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளும் நிபுணர்களும் கலந்து கொள்ளும் மாநாடு கொழும்பில் ஆரம்பம்




மூதாளர் பேணலகம் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் திறந்துவைப்பு

➡ மூத்த பத்திரிகையாளர் எல்.எம்.கோபாலரத்தினம் அவர்கள் தேசியத்தலைவரால் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.



மூத்த பத்திரிகையாளர் கோபாலரத்தினம் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் கௌரவிப்பு

➡ தமிழீழமெங்கும் மாணவர் உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்கும் வகையில் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இடம் பெற்றன.







திருகோணமலையில் நடைபெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வையும் யாழ்.இல். நடைபெற்ற நிகழ்வில் தியாகி பொன்.சிவகுமாரனின் சிலைக்கு அவரது சகோதரன் மலர்மாலை அணிவிப்பதையும் நடைபெற்ற எழுச்சி ஊர்வலத்தையும் மேல் உள்ள படங்களில் காணலாம்.

# கனவு நனவாகுமா என்ற ஏக்கத்துடன் இக்கட்டான நிலையில் சனாதிபதி சந்திரிகா

சந்திரிகாவின் சனாதிபதிப் பதவிக்காலத்தை மூன்றாம் முறையும் நீடிக்கும் குறுக்கு வழிகளை ஆராய்ந்து தோல்வி என்ற நிலைக்கு வந்தபின்னர் தற்போது அவர் பாராளுமன்றத்தில் பிரதமர் பதவியைக் கைப்பற்றும் திட்டங்களை ஆராய்ந்து வருகிறார்.



ஆயினும் அவரின் இந்தக் கனவு அவரை ஏமாற்றிவிடும் என அவரின் நெருங்கிய அரசியல் ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜே.ஆரின் அரசியல் அமைப்பு பிரதியைப் பயன்படுத்திக் கொண்டு சனாதிபதிப் பதவிக் காலத்தை நீடிக்க அவசர அவசரமாகக் காரியங்கள் நடக்கின்றன.

அவரது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன் படுத்தி அவ்வாறு பதவிக் காலத்தை நீடிக்கலாம்.

அல்லது அதில் சட்ட திருத்தத்தை மேற்கொண்டும் பதவியில் நீடிக்கலாம். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நிரூபிக்கலாம் அது ஐக்கிய தேசிய முன்னணிக்கு சவாலாகவே இருக்கும்.

எனினும் தற்போது கட்சி புனரமைப்புச் செய்த பின்னர் எஸ்.பி.திஸாநாயக்க ஐ.தே.முன்னணியில் ஒரு பிரதான இடத்தை வகிப்பதால் அவருக்கும் சனாதிபதிப் பதவியில் ஒரு கண் இருக்கிறது. அதனாலேயே கடந்தவாரம் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் அவர் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறை அவ்வாறே இருக்கட்டும் என்று கருத்துத் தெரிவித்தார். அது சந்திரிகா மூன்றாம் முறையும் சனாதிபதிப் பதவியில் நீடிக்கச் செய்யும் ஒரு தூண்டுதலாக சந்திரிகா பயன் படுத்த எண்ணலாம் இதனால் அவர் அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவரவும் முடியும்.

அதற்காக மக்களின் ஆணையைப் பெறவும் வேண்டும் ஆயினும அது அவருக்கு தோல்வியையே தரும். அரசியல் அமைப்புச்சபை உருவாக்கும் விடயத்திலும் அவருக்கு சாதகமான ஆதரவு கிடைக்கா திருக்கிறது. ஆயினும் மீண்டும் சனாதிபதி பதவியிலிருக்கும் விருபபம் அவரிடமிருந்து நீங்கிவிடவில்லை.

அண்மையில் சந்திரிகா இ.தொ.காங்கிரஸின் ஆதரவைப் பெறும் நோக்கில் ஆறுமுகம் தொண்டமானுடன் மங்கள சமரவீர மூலம் நடத்திய பேச்சுவார்த்தையிலும் காங்கிரஸ் கட்சி அதிருப்தியடைந்து ஆதரவு வழங்க பின்னடித்தது.

இவையனைத்தையும் விட பாராளுமன்றப் பெரும்பான்மை விடயத்திலும் சந்திரிகாவுக்கு மகிழ்ச்சியில்லை. ஜே.வி.பி.யின் ரில்வின்சில்வாவும் கூட்டணிகுள் பெரும்பான்மையை நிரூபிக்காதுவிட்டால் பாரிய பிரச்சினை தோன்றும் என சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளார்.

மிக அண்மையில் சந்திரிகாவும் தனது அமைச்சர்களை பெரும்பான்மையை நிரூபிக்கும்வழிகளைத் தேடுமாறு கண்டிப்பான உத்தரவை விடுத்திருக்கிறார்.

இதற்கிடையில் நிறைவேற்று சனாதிபதி முறையை மாற்றி எப்படியாவது பாராளுமன்றத்துள் பிரவேசிக்க வேண்டுமென்பதும் சந்திரிகாவின் திட்டமாக விருக்கிறது. எல்லாவற்றிற்கும் அரசியல் அமைப்பை மாற்ற அரசியல் அமைப்புச் சபையை உருவாக்க வேண்டுமென்பது சனாதிபதியின் உடனடித் தேவையாகியுள்ளது.



சந்திரிகாவின் நிலைப்பாடு இவ்வாறு இருக்க கூட்டணியின் பிரதமரான மகிந்த ராஜபக்ஷ எதுவித ஊழல் மோசடிகளிலும் ஈடுபடாத ஒரேஒரு அரசியல் வாதியாக மிளிர்கிறார்.

இந்த நிலையில் சந்திரிகா தனது எதிர்கால நடவடிக்கைகள் பற்றி எதுவும் தீர்மானிக்க முடியாத இக்கட்டான நிலையிலிருக்கிறார். தனது அரசாங்கத்தை நகர்த்தமுடியாமல் கதிர்காமர்,ஜயந்த தர்மபால போன்றவர்களை வைத்து வெளிநாட்டு, உள்நாட்டு அலுவல்களை கவனித்துக்கொண்டிருக்கிறார். தர்மபாலவிடம் சமாதான நடவடிக்கைகள் பற்றி விசாரிப்பதோடு மட்டும் சரி ஐ.ம.சு முன்னணிக்குள் ஏற்பட்டிருக்கும் கசப்புணர்வு காரணமாக சமாதானம் தொடர்பாக எரிக்சூல் ஹெய்மை சந்திக்கவும் சந்திரிகா துணிவற்றிருக்கிறார்.

இதற்கிடையில் ஊடகவியலாளர் நடேசன் கொல்லப்பட்டமை கிழக்கை பொறுத்தளவில் சமாதானம் பற்றி சிந்திக்கவைத்துள்ளது இது அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடை பெறும யுத்தத்தால் அன்றி இடைப்பட்டவர்களால் நடத்தப்படும் ஒரு சதித் திட்டம் எனக்கருதப்படுகிறது.

இவ்வாறான நிலைமைகளால் சந்திரிகா பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

சண்டே ரைம்ஸ்
ஆசிரிய
தலையங்கத்திலிருந்து
மொழியாக்கம்
**வடிவேல்**

## சனாதிபதியிடமுள்ள அமைச்சுக்கள் மா.சபைத் தேர்தலின் பின் பகிரப்படும்

### - கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவை மாகாணசபைத் தேர்தலின் பின்னர் மறுசீரமைக்கப்படவுள்ளது.

மாகாணசபைத் தேர்தலின் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பத்தில் இணையலாம் என்ற கருது கோளின் அடிப்படையிம், சனாதிபதியிலும் இருக்கும் கல்வி, வடக்குபுனரமைப்பு மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களை தனித்தனி அமைச்சர்களிடம் பகிர்ந்தளிப்பதனையும் நோக்கமாகக் கொண்டு இந்த அமைச்சரவை மறு சீரமைப்பு இடம்பெறவுள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜெயவர்த்தன பல்கலை.மாணவன் கொலை தொடர்பாக மற்றுமொருவர் கைது

(கொழும்பு)

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையே கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மோதலில் கலைப்பீட மூன்றாம் வருட மாணவர் ஒருவர் கத்திக்குத்திற்கு இலக்காகி உயிரிழந்தமை தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக இது வரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது, கைது செய்யப்பட்டுள்ள மூன்று மாணவர்கள் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தற்போதுகைது செய்யப்பட்டுள்ளவர் பொலிசாரால் விசாரணைக்குள்ளாக்கப் பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுமதிபாலவின் மனுவை விசாரிக்கும் அதிகாரம் மேல் முறையீட்டு நீதிமன்றிற்குக் கிடையாது!

### சிறி. சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா கிறிக்கெட் ரெவிக்கொம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை விசாரிக்கும் அதிகாரம் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு கிடையாது என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித்த பெனாண்டோ ஆட்சேபம் தெரிவித்தார். அதிகார மட்டத்தில் கீழ்வரிசையில் இருக்கும் நீதிமன்றத்தில் நிராகரிக்கப் படும் பட்சத்தில் மாத்திரமே பிணைவழங்கமுடியாத குற்றச் செயல்கள் தொடர்பாக மேல் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்ய முடியும். என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் குறித்த பிணைமனுவை விசாரிக்கும் அதிகாரம் மேல் முறையீட்டு மன்றத்திற்கு இருக்கின்றது என்று மனுதாரரான சுமதிபாலவின் சார்பில் ஆஜரான சனாதிபதி சட்டத்தரணி தெரிவித்திருக்கின்றார் விசாரணைகள் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

## ஐ.ம.சு.முன்னணியின் அரசியல் சூதாட்டம் சமாதான முயற்சிகளில் கெடுதியான அறிகுறி

### ஊடகவியலாளர் வசந்த ராஜா தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் சூதாட்டம் சமாதான முயற்சிகளில் கெடுதியான அறிகுறிகளைக் காட்டுகின்றது. இவ்வாறு "லங்கா டை"யில வசந்தராஜா எழுதிய கட்டுரையில் தெரிவித்தார்.

1994-95 சமாதான பூர்வாங்க ஏற்பாட்டின் போது தமிழ் மக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஆப்புவைக்கும் நடவடிக்கையை மேற்கொண்ட சனாதிபதி சந்திரிகா

தற்போது மாக்ஸிஸ்ட் ஜே.வி.பி.யுடன் உடன்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை தாமதப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களிடையே புலிகளுக்குள்ள நம்பகத்தன்மையில் விபரீதமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என சந்திரிகா எண்ணுகிறார்.

அநேக ஜே.வி.பி. ஆர்வலர்கள் கருணா போன்ற புலிகளின் தலைமைக்கு எதிரான குழுக்களுடன் இணைந்து புலிகளின் தலைமைக்கு எதிராக இடையூறுகளை ஏற்படுத்துவதற்கு ரகசிய ஊக்குவிப்பை சனாதிபதி வழங்கலாம். என்றும் சனாதிபதி கருதுகிறார்.

கொடையாளி நாடுகள் பாரிய நிதி உதவியை இடைநிறுத்தி வைத்துள்ளன.

இந்நிலையில் அரச சொத்துக்களை தனியாருக்கு விற்பதன மூலம் நிதி முடக்கத்தை சீர் செய்யலாம் என சந்திரிகா எண்ணுகிறார்

அநேக நாடுகள் இலகு பணக கொள்கை மூலம் நன்மைகளை அடைந்துள்ளன. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணின் ஆட்சி முறையானது இது விடயத்தில் மிகவும் அதிர்ஷ்டம் இல்லாததாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரமானது எப்பொழுதும் மிகவும் கூடாத பாகத்திலேயே நுழைகின்றது. ஆனால் ஜே.வி.பி.யின் "புலிப்பயம்" ஐமசு முன்னணி ஆட்சியில் பெறப்படப்போகும் பொருளாதார வீழ்ச்சி குறித்து, அவர்களை குருடாக்கி விட்டுள்ள. என்றும அவர் கூறினார்.

## சனாதிபதிக்கெதிராக அரசியல் குற்றப்பிரேரணைக்கு ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை ஒன்றை முன்வைக்க ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் முயற்சி செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி முக்கியமான சில விடயங்களை நிறைவேற்றவில்லையெனவும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இன்னமும் சரியான முறையில் நிறைவேற்றவில்லையெனவும் குற்றம் சாட்டியே அவருக்கெதிரான குற்றப்பிரேரணையினைத் தயாரிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினை எந்தவித காரணமுமின்றி சனாதிபதி சந்திரிகா கலைத்த பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டு மாதங்களாகியும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவில்லையெனவும் ஐக்கிய தேசிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

# எதிர்க்கட்சியினரின் ரகளையையடுத்து மக்களவை, மாநிலங்களவைக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

**ஊழல்மோசடிகள்செய்த மக்களவை உறுப்பினர்கள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிப்பதாகக் கூறி தேசிய சனநாயகக் கூட்டணியினர் மக்களவையிலும் மாநிலங்களவையிலும் செய்த ரகளையையடுத்து இரு கூட்டங்களும் நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளன.**

நேற்றைய தினம் மக்களவை கூடிய போது தேசிய சனநாயகக் கூட்டணி அமைச்சர்கள் மத்தியரசில் கறைபடிந்தவர்கள் இருப்பதாக கூறி கூட்டத்தொடரில் ரகளை செய்தனர். பின்னர் வெளிநடப்புச் செய்தனர். இதனால் மக்களவை நேற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதே போல் மாநிலங்களவையின் முதல் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. அங்கும் தேசிய சனநாயக கூட்டணி அங்கத்தவர்கள் ஊழல் பேர்வழிகள் மத்திய அரசில் இடம்பெற்றுள்ளதாக ரகளை செய்தனர். பின்னர் வெளிநடப்புச்செய்தனர் இதனையடுத்து மாநிலங்களவையின் கூட்டத் தொடரும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# கார்க்கில் போரில் ஏற்பட்ட இழப்பை விவகாரமாக்க காங்கிரஸ் முயற்சி

(புதுடில்லி)

தேசிய சனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது பாகிஸ்தானுடன் கார்க்கில் யுத்தம் நடந்தது. இதன்போது ஏராளமான போர் வீரர்கள் இறந்து போனார்கள். இதற்கு அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ச் பெர்னாண்டஸ் தான் முழுப் பொறுப்பு இதனைப் பாராளுமன்றத்தில் விவகாரமாக்கவுள்ளதாக நேற்றுமுன்தினம் காங்கிரஸ் கூறியுள்ளது.

இதேவேளை பாராளுமன்றத்தில் காங்கிரஸ் எழுப்பும் விவகாரங்களை தாம் சந்திக்கத் தயாராக இருப்பதாக பாரதியஜனதா சவால் விட்டுள்ளது.கார்க்கில் போரில் தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்டு இருந்தது. விமானத்தாக்குதல் நடத்த உத்தரவிட்டதில் தாமதம் ஏற்பட்டுவிட்டது. இதனால் ஏராளமான போர் வீரர்கள் இறந்து போனார்கள்.

இதற்கு ஜோர்ச் பெர்னாண்டஸ்தான் பொறுப்பு என்று காங்கிரஸ் கட்சியின் அஸ்வினிகுமார் கூறியுள்ளார். இதேவேளை கார்க்கில் விவகாரத்தை நாம் பாராளுமன்றத்தில் சந்திக்க தயார் பிரதமரின் மத்திய அர சில் ஊழல் நிறைந்தவர்கள் இருப்பதாக சனாதிபதிடம் கடிதம் கொடுத்துள்ளோம். அதற்குத் தான் காங்கிரஸ் கார்க்கில் விவகாரத்தை எழுப்புகின்றது என்ற பாரதிய ஜனதா செய்தித் தொடர்பாளர் அருண்ஜெட்லி கூறியுள்ளார்.

# மஞ்சல் காமாலைக்கு குறைந்த செலவில் தடுப்பு மருந்து இந்தியாவில் கண்டுபிடிப்பு

மஞ்சல் காமாலை நோய்க்கு மிகக் குறைந்த செலவில் தடுப்பு மருந்தை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக இந்திய மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் கபில் சிபல் தெரிவித்துள்ளார். இதேபோன்று அறிவியல், வளத்தைப் பயன்படுத்திக்கொள்ள உயிரியல் தொழில்நுட்பத்துறை ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக யூ.என்.ஐ.க்கு தெரிவித்துள்ளார்.

# கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு நீர் பெற்றுக்கொடுக்க ஆவன செய்வேன்

## இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்



(புதுடில்லி)

தமிழ்நாட்டிற்கு தேவையான தண்ணீரை கர்நாடகத்திலிருந்து கூடியவிரைவில் பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்யவுள்ளதாக புதிய பிரதமர் மன்மோகன்சிங் நேற்று உறுதியளித்துள்ளார்.

தமிழக டெல்ரா விவசாயிகளின் குறைகளை தாம் அறிந்துள்ளதாகவும் அதனால் தாம் மிக விரைவில் விவசாயிகளுக்கு தண்ணீர் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்யவுள்ளதாகவும் ஊடகவியலாளர்களிடம் நேற்று அவர் புதுடில்லியில் கூறியுள்ளார்.

இதேவேளை காவிரி நீரில் தமிழ் நாட்டுக்குரிய பங்கைப் பெற்றுத் தருவது சோனியா காந்தி கருணாநிதி ஆகியோரின் பொறுப்பு என்று தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிக்கைமூலம் கூறியிருப்பது பிரச்சினைகளை அதிகரிக்குமே தவிர வேறு எதுவித வழிவகைகளையும் ஏற்படுத்தாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வவு.அகதி முகாம்களிலிருந்து 6 குடும்பங்கள் ஊர் திரும்பின

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா அடம்பன்குளம் பூந்தோட்டம், சிதம்பரபுரம் ஆகிய அகதி முகாம்களில் தங்கியிருந்த ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சி வந்தடைந்தனர்.

வவுனியா மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டின் பெயரில் மேற்படி குடும்பங்கள் நேற்று புனர்வாழ்வு அமைச்சின் வாகனத்தில்கிளிநொச்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

மேற்படி குடும்பத்தினரை கரைச்சிப்பிரதேச செயலகத்தினர் பொறுப்பேற்று அவர்களுக்கு மதிய உணவுகள் வழங்கியதுடன் இவர்களை அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பிவைத்தனர்.

இவர்களுக்கு உலர் உணவல்லாத பொருட்களினை யு.என்.எச்.சி. ஆர் நிறுவனத்தினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)



# பாடப்புத்தகங்கள் பாரம் கூடிவிட்டது தவணைமுறையில் அச்சடிக்க அரசு முடிவு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் 10 கிலோ முதல் 12 கிலோ வரையிலான பாடப்புத்தகங்களையும், அதனுடன் உணவுபெட்டி,நீர் போத்தல்களையும் சுமக்கின்றனர். இதனால் கூனல் உட்பட்ட முள்ளந்தண்டு நோய்களை அவர்கள் எதிர்கொள்கின்ற னர். இதனையடுத்து அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தத்திட்டத்தின் படி பாடசாலை மாணவர்களுக்கு வருடாந்தம் விநியோகிக்கப்பட்டு வரும் பாடப்புத்தகங்களைத் தவணை அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப்பிரிந்து அச்சடித்து வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு வருடாந்தம் விநியோகிக்கப்பட்டு வரும் பாடப்புத்தகங்களை ஒரு வருடத்திற்கான பாடப்புத்தகங் களாக அச்சிடாமல் அதனைத் தவணை அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒரு தவணைக்கு ஒரு பாடப்புத்தகம் என்ற அடிப்படையில் அச்சிட்டு மாணவர்களுக்கு விநியோகிப்பது என்றும் அரசு முடிவுசெய்துள்ளது.

# ரத்னசீல தேரரின் பின்னணிச்சக்திகளை அரசு இனங்காட்டாவிட்டால் விளைவு மோசமாகும்

-எச்சரிக்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

கந்துலுவே ரத்ன சீலதேரரின் பின்னணியில் இயங்கும் சக்திகளை அரசாங்கம் இரண்டு வார காலத்தில் இனம் காட்டவேண்டும் இல்லையேல் லட்சக்கணக்கான மக்களைத் திரட்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாகவும் ஜாதிகஹெல உறுமய எச்ரிக்கை செய்துள்ளது.கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜாதிகஹெல உறுமய ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியது.இதில் பேசிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் அரலியேரத்ன தேரர்,

அரசாங்கத்தை நல்வழிப்படுத்த எம்மிடம் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. இருப்பினும் எம்மைப் பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்வதாகத் தெரியவருகிறது.

எம்மிடமிருந்து பிரிந்து சென்ற கந்தலுவே ரத்ன சீலதேரரின் பின்னணியில் இயங்குகின்ற சக்தியை உடனடியாக அரசாங்கம் இனங்காட்டவேண்டும். இல்லாது விட்டால் பயங்கர விளைவுகளை அரசாங்கம் சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# மாகாணக்கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் 156 வடக்குக் கிழக்கில் இயங்க முடியாத நிலையில்

## -மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் 156பாடசாலைகள் கடந்த காலத்தில் இயங்காது மூடப்பட்டுள்ளன. இவை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கூறியுள்ளார்.இதேவேளை வடக்கு மாகாணத்தில் 147 பாடசாலைகள் அவற்றுக்கு சொந்தமான இடங்களை விட்டு வேறு இடங்களில் இடம்பெயர்ந்து இயங்குகின்றன. இவற்றையும் அவற்றுக்குரிய இடங்களில் இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கான நடவடிக்கை கள் யாவும் வடக்கு-கிழக்கு மாகாண சமுதாய மீள் கட்டமைப்பு நிறுவனமான நிக்கோட் அமைப்பின் உதவியைப் பெற்று உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.


# கேள்வி அறிவித்தல்

வலயக்கல்விப்பணிப்பாளர்,துணுக்காய் அவர்களால் பின்வரும் வேலைகளுக்கு மூடிய கேள்விகள் இக்ராட்டுடன் பதிவு செய்த தரம் 8 தகைமையுள்ள, கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 250.00உம் கேள்விப்பணமாக ரூபா1000.00 உம் வலயக்கல்வி அலுவலகத்தில் 11.06.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப3.00மணிக்கு முன்னர் செலுத்திக் கேள்விப்பத்திர ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் அனைத்தும் 16.06.2004 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர்,கேள்விச்சபை, வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய், மாங்குளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல்வேண்டும்.

## வேலை விபரம்


பாடசாலை வகுப்பறை கட்டடம் 80'x25' அமைத்தல்
மு/ தென்னியன்குளம் அ.த.க பாடசாலை
கணனி அறை புனர்நிர்மாணம்,
மு/யோகபுரம்,ம.வி 20'x20'

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தக்காரர் வேலைக்குரிய பிணைத்தொகையை பணமாக வலயக்கல்வி அலுவலகத்தில் 18.06.2004ஆம் திகதிக்கு முன் செலுத்தி உரியஒப்பந்தத்தை செய்துகொள்ளல்வேண்டும்.

மேலதிகவிபரங்களை எமது அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மா.தேவேந்திரன்,
தலைவர்/வலயக்கல்விப்பணிப்பாளர்,
கேள்விச்சபை,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

(4583) வீ.தயாசீலன்



நேற்று முன்தினம் ரம்பாவில் நடைபெற்ற கென் சொம்த் ரொப்பி ஸ்ரான்லி கிண்ணத்திற்கான இறுதியாட்டத்தில் வென்ற பிராட்ரிச்சர்ட் தனது வெற்றிக் கிண்ணத்தை உயர்த்திக் காட்டுகிறார்.

## உலக 'செஸ்' சாம்பியனாக பல்கேரிய மங்கை

பல்கேரியாவைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் அனடோனெடா ஸ்டெபனோவா உலக மகளிர் செஸ் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

அவருக்கு 27 இலட்சம் ரூபா பரிசு கிடைத்தது. ரஷ்யாவைச் சேர்ந்த எகதெரினாவை இறுதிச் சுற்றில் வென்றதன் மூலம் மேற்படி பணப்பரிசை வென்றார்.



பயிற்சியின்போது தனது உறுதியைக் காண்பித்தல் மூலம் காண்பவரின் புருவங்களை உயர்த்த வைக்கும் 'இகால் அன்ட்ரு மேர்ரென்ஸ்' பயிற்சியின்போது

## இங்கிலாந்து - நியூசிலாந்து 2ஆவது டெஸ்ட் போட்டி

# இங்கிலாந்துக்கு 9விக்கெட் வெற்றி தொடரையும் கைப்பற்றிக்கொண்டது

இங்கிலாந்து-நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 9விக்கெட்டுக்களால் நியூசிலாந்து அணியைத் தோற்கடித்துள்ளது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற நிலையில் இங்கிலாந்து தனதாக்கியது.



முன்னதாக தனது முதல் இனிங்ஸில்துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 409ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணித்தலைவர் பிளெமிங் 97ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹார்மிசன் 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 526 ஓட்டங்களைப் பெற்றது. மார்க்கஸ்ரெஸ்கொதிக் 132, ஜோன்ஸ் 100ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கொட்ஹறிஸ் 3விக்கெட்டுக்களை கைப்பற்றினார். நியூசிலாந்து தனது இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து வீரர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ளமுடியாது விக்கெட்டுக்களை மளமளவெனப் பறிகொடுத்ததுடன் 169ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் இங்கிலாந்து அணிவெற்றி பெறுவதற்கு 49 ஓட்டங்களே தேவைப்பட்டன. இதனை ஒரு விக் கெட்டை மாத்திரம் இழந்து இங்கிலாந்து பெற்றுக்கொண்டது.



இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

# பங்களாதேஷை ஏமாற்றிய 2ஆவது டெஸ்ட் போட்டி; மேற்கிந்தியத்தீவுக்கு இனிங்ஸ் வெற்றி

பங்களாதேஷ் அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் இடையில் கிங்ஸ்டனில் நடைபெற்ற இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய தீவு ஒரு இனிங்ஸ்,99 ஓட்டங்களினால் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 284 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 4விக்கெட்டுக்களையிழந்து 559 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பின்னர் பாரிய சவாலுடன் ஆடிய பங்களாதேஷ் தனது இரண்டாவது இனிங்ஸில் 176 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் பெற்றோ கொலின்ஸ் 53 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியில் 261 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்த ராம்நரேஸ் சர்வான் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதன் மூலம் மேற்கிந்திய அணி 1-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியை பங்களாதேஷ் தனது திறமையான துடுப்பாட்டத்தின் மூலம் சமன் செய்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறாதுவிட்டால் அணித்தலைவர் பதவியைத் துறப்பேன் என பிரைன்லாறா சவால்விடுத்திருந்தமை நோக்கத்தக்கது.

இந்தத் தோல்வியோடு சேர்த்து இதுவரை டெஸ்ட் அந்தஸ்து கிடைத்ததன் பின்னர் 30 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பங்களாதேஷ் இதுவரை எந்தவொரு டெஸ்ட் போட்டியிலும் வெற்றிபெறாதது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு முதல் முறையாக ஒலிம்பிக் ஜோதி 102 விளையாட்டு வீரர்கள் ஏந்திச் செல்வர்

கிரிஸ் நாட்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதி உலகின் பல்வேறு நாடுகள் வழியாக ஜப்பான்-தென்கொரியாவை அடைந்துள்ளது.

நேற்றுக்காலை சீனத் தலைநகர் பீஜிங்கை நோக்கி புறப்பட்ட ஒலிம்பிக் தீபம் முதன் முறையாக இந்தியா வழியாகவும் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

நாளை டெல்லிக்கு வருகை தரும் ஒலிம்பிக் தீபத்தை வரவேற்க சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டெல்லியில் 32 கிலோமீற்றர் பயணம் செய்யும் ஒலிம்பிக் தீபத்தை முன்னாள் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் முன்னாள் ஓட்ட பந்தய சாதனையாளர் மில்காசிங் கிரிக்கெட் வீரர்கள் ராவிட், பதான், செவாக் மற்றும் ரானா, மல்லேஸ்வரி உள்ளிட்ட 102 சகல விளையாட்டு வீரர்கள் இந்தத் தீபத்தை ஏந்திச் செல்லவுள்ளனர்.

இதனிடையே ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியின் முதல் கட்டமாக 62 பேர் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த சில வாரங்களில் மேலும் வீரர்களின் பெயர் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# அனைத்து மட்டக் கிரிக்கெட் போட்டிகளையும் சிம்பாப்வே அரசு தடைசெய்ய வேண்டும்!

## முன்னாள் தலைவர் ஹீத்ஸ்ரீக்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹீத்ஸ்ரீக் தன்னுடைய நாடு சர்வதேசத்தில் கிரிக்கெட் விளையாடுவதை தடைசெய்ய வேண்டும் அல்லது அனைத்து மட்ட கிரிக்கெட்டையும் தடைசெய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நான் நினைக்கவில்லை எந்த வெளிநாடும் இனி ஒரு நாள் போட்டிகளிலோ டெஸ்ட் போட்டிகளிலோ விளையாடுவதற்காக சிம்பாப்வே செல்லப்போவதில்லை. தொடர்ச்சியாக ஏனைய நாடுகள் இவ்வாறு அந்தச்சுற்றுப்போட்டிகளை நிராகரிக்கும் பட்சத்தில் சிம்பாப்வே தன்னுடைய நாட்டின் கிரிக்கெட்டைத் தடைசெய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாக இருப்பதாகவும் அந்த அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.



சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டிய ரீதியில் அமைகின்ற முடிவுகளும் இதுதவிர சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தீர்மானங்களும் தொடர்ச்சியாகக் கண்டிக்கப்பட வேண்டியிருப்பதால் இதில் சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று ஸ்ரீக் கூறியுள்ளார்.

# இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சியில்

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் கிளிநொச்சி சர்வதேச அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தால் நடத்தப்படும் ஆண்/பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று எதிர்வரும் 20.06.2004ஆம் திகதி அன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டி மல்லாவியில் ஆரம்பிக்கப்பட்டு மாங்குளம் சந்தியை அடைந்து யாழ்.வீதியூடாக கிளிநொச்சி பொது மைதானத்திற்கு அருகில் நிறைவடையும் இப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இப் போட்டிக்கான சைக்கிள் கொக்கு வில் 44 பற்களையும்,பிறிவீல் 18 பற்களையும் கொண்டதாக இருக்க வேண்டும் எனவும் அத்தோடு முன்போக் கைப்பிடியும் இருக்கக் கூடாதெனவும் பங்குகொள்ள விரும்புவோர் முழுப்பெயர் விலாசம் போன்ற விபரங்களுடன் தங்கள் விண்ணப்பங்களை 15.06.2004க்கு முன்பாக கரடிபோக்கில் அமைந்துள்ள அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் பணிமனையில் ஒப்படைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

(சோ.கு)

# முல்லை. மாவட்டக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி

முல்லை. மாவட்டத்திலுள்ள 5பிரதேசச் செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட மாவட்டக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 15,16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் இவ்விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் நடைபெற உள்ளதாக முல்லை.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்தார். (20)

# பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

கிளிநொச்சியில் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் ஒரு கட்டமாக ஆண்கள் பெண்களுக்கான மிதிவண்டி ஓட்டப்போட்டி நிகழ்வு நடைபெற்றது.

04-06-2004 ஆம் நாள் நடைபெற்ற பெண்களுக்கான இப்போட்டி பரந்தன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து கொக்காவில் சந்திவரை சென்று மீண்டும் கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனைக்கு முன்பாக வந்து நிறைவடைந்தது இப்போட்டி 40 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டதாகும்.

நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 60 கிலோமீற்றர் மிதிவண்டி ஓட்டப்போட்டி பரந்தன் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பித்து மாங்குளம் சந்திவரை சென்று மீண்டும் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனைக்கு முன்பாக வந்து முடிவடைந்தது.

மேற்படி போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்கள் அகில இலங்கை தேசிய போட்டிகளில் பங்கு பற்றும் வாய்ப்பினைப் பெற்றனர். (ச)

## சினேக பூர்வ கிரிக்கெட் போட்டி

மன்னார் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் மன்னார் கச்சேரி கிரிக்கெட் அணிக்கும் வவுனியா கச்சேரி கிரிக்கெட் அணிக்கும் இடையில் சினேகபூர்வமான முறையில் கிரிக்கெட் போட்டி ஒன்று இடம் பெற்றது. இதில் மன்னார் கச்சேரி அணி வெற்றி பெற்றுக் கொண்டது. (மி)

## சிந்தனைக்கு



ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ, ஆயுதபலமோ, அல்ல; அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி.

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

09-06-2004


## இலங்கையின் எதிர் காலம்!

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடருமா? இதுவே இன்று இலங்கை அரசியல் வட்டாரங்களில் முக்கியத்துவம் மிக்க கேள்வியாக உள்ளது. ஏனெனில் நோர்வே அரசின் மத்தியஸ்துவத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டவை ஆகிவிட்டன.

சபாநாயகருக்கான போட்டியில் தோல்வியுற்றதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்குமாறு நோர்வேயைக் கேட்டுக்கொண்டார். நோர்வேயும் தீவிரமான முனைப்புடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் சனாதிபதி நோர்வேயை அழைத்ததிற்கு ஏற்றவாறு நோர்வேயின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமையால் தற்பொழுது இவ்விடயம் கிடப்பில் போடப்பட்டதொன்றாகியுள்ளது. அதாவது பேச்சுவார்த்தை எங்கே? எப்பொழுது? என்பதை விட, பேச்சுவார்த்தை நடைபெறுமா? என்பதே கேள்விக்குரியதாகி விட்டது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசர அவசரமாக நோர்வேயை அழைத்தமைக்கும் பின்னர் அதில் முனைப்புக்காட்டாமல் விட்டமைக்கும் சனாதிபதி சந்திரிகாவின் குழப்பகரமான முடிவுகளே காரணம் என அவரைக்குற்றம் சாட்டுபவர்களும் உண்டு. ஜே.வி.பி. யின் அழுத்தத்தினால் சனாதிபதி சமாதானப் பேச்சுவார்த் தைகளைக் கிடப்பில் போட்டுள்ளார் எனக் கூறுபவர்களும் உண்டு.

எது எவ்வாறாயினும் ஆளும் கட்சிக்குள் இது தொடர்பான கருத்தொற்றுமை இல்லை என்பது வெளிப்படையானது. குறிப்பாக ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பி.யும் சமாதான முயற்சிகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்துவத்தை எதிர்ப்பதோடு அரசியற் தீர்வுக்குக் காட்டப்படும் முக்கியத்துவம் குறித்தும் திருப்தி கொண்டதாக இல்லை.

ஜே.வி.பி.யினரின் தற்போதைய நிலைப்பாட்டின்படி விடுதலைப் புலிகளுக்கும்–சிறிலங்கா அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது அந்த மேசையில் நோர்வேத் தரப்பு அமரக்கூடாது என்பது புதிய நிபந்தனையாகும். இத்தகையதொரு நிலையில் நோர்வே மத்தியஸ்துவத்துடன் பேச்சுவார்த்தை என்பது எவ்வாறு சாத்தியமானதாக இருக்க முடியும்?

அத்தோடு ஜே.வி.பி நோர்வேயின் மத்தியஸ்துவத்திற்கு மட்டுமல்ல விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்தும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டதாகவே உள்ளது. அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பது தனியரசு உருவாவதற்கான அடித்தளம் என்பது ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகவுள்ளது. இதனால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையே பேச்சுவார்த்தைக்கு தடங்கல் என்பது அதன் வாதமாகும்.

இந்நிலையில் நோர்வேயின் மத்தியஸ்த்துவம் மட்டுமல்ல, விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளையும் ஜே.வி.பி முற்றாக நிராகரிப்பதாகவே உள்ளது. ஆனால் இவ்விரண்டு அம்சங்களும் இன்றிச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இனித் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் எந்தளவிற்கு உள்ளது என்பது சந்தேகத்திற்கு இடமானதொன்றே. ஏனெனில் ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராகப் போடும் முட்டுக்கட்டைகளை அரசாங்கம் தாண்டிச் செல்வதென்பது இலகுவானதல்ல.

அவ்வாறு இல்லாது சனாதிபதி சந்திரிகாவினால் இதனைச் சாதிக்க முடிந்திருக்குமானால் பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸில் நடைபெற்ற சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் ஆலோசனைக்கூட்டத்திற்கு முன்பாகவே சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட்டதாகக் காட்டிக் கொள்ளும் வகையிலான நடவடிக்கைகளாவது ஈடுபட்டிருக்க முடியும். ஆனால் சனாதிபதிக்கு அது கூடச் சாத்தியப்பாடானதாக இருக்கவில்லை.

அவ்வாறு இருந்திருக்குமானால் உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்தி குறிப்பிடத்தக்க நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும். ஆனால் சானதிபதி சந்திரிகாவினால் அப்புக்குத்தானும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று கூடக் கூறிக்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் நோர்வே மீண்டும் தொடங்கிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவது எந்தளவிற்கு சாத்தியப்பாடானது? தற்போதைய நிலையில் பார்த்தால் மற்றுமொரு இலங்கிஸ் முடிவுற்றதாக நோர்வே இருப்பதைத் தவிர வேறுமார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகையினால் சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலம் எத்தகையதாக இருக்கும் என எதிர்வு கூறுவது சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூற முடியும். இலங்கையில் சமாதானம் நிலைநிறுத்தப்படாது விட்டால் அதன் எதிர்காலம் என்பது மீட்டெடுக்கப்பட முடியாத [illegible] தள்ளப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

# சமாதானம் தொடர்பாக அரசின் அசமந்தப் போக்கிற்குக் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசாங்கத்தின் சமாதானம் தொடர்பான அசமந்தப் போக்கைக் கண்டித்து முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து யாழ்குடா நாடு தழுவியதாக மேற்கொள்ளும் மாபெரும் கண்டனப் பேரணியில் அனைத்துப் பொது மக்களையும் கலந்து கொண்டு எமது உரிமைகளை, எமது எழுச்சிக்குரல்களை உலக சமூகத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிப்படுத்த வேண்டும் என அழைக்கின்றோம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

எமது மக்கள் நீண்ட காலமாக, பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் சொந்த ஊரில், சொந்த வீடுகளில் வாழத்தகுதியற்றவர்களாக அரச படைகளின் ஆக்கிரமிப்புக் காரணமாக வாடகை வீடுகளில் வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருக்கும் அவல நிலை இன்று தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது, எமக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும், எமது மீள் குடியேற்றத்தினை உறுதிப்படுத்தவும், எமது மண்ணில் புத்தி ஜீவிகள், பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டிக்கவும், அலைஅலையாக மக்கள் அனைவரும் எழுந்து எமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம் என மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகல எதிர்க்கட்சிகளையும் இணைத்து அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போம்

### ஹெல உறுமய பா.உ.கள் அறிவிப்பு

சகல எதிர்க்கட்சிகளுடனும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஹெல உறுமய கட்சியினரால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இணைந்தா அரசிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றீர்களென ஊடகவியலாளர் வினாவிய வேளை:-

சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து செயற்படவுள்ளதாக ஹெல உறுமயவின் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார். சுமங்கல தேரர், அக்மீபன தயாரட்ண தேரர் ஆகியோர் ஆளும் தரப்பினரால் தாக்குதலுக்கு உள்ளாகியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை தமது கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேர் தாக்கப்பட்டமைக்கு காரணமாகயிருந்தார்களென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர்களுள் அமைச்சர்களான பெர்னாண்டோபுள்ளேயும், ஜீவன் குமரதுங்கவும் முக்கியமாக இடம் பெற்றுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலம் தொடக்கம் இன்றுவரை ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தேரர்களுக்குக் களங்கத்தையும், அபகீர்த்தியையும் ஏற்படுத்துவதில் அரசு செயற்பட்டு வருகிறது. இது கவலைக்குரிய விடயமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்

# நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதைவிட எம்மை ஒழிப்பதே அரசாங்கத்தின்குறி

### –பாராளு.வில் பயங்கரவாதம் புகுந்துவிட்டதாக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் இன்று நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விடுத்து எமது கட்சியை இல்லாதொழிக்கவே அரசாங்கம் முற்படுகிறது என ஹெல உறுமய தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும், கட்சித் தலைவருமான எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான தாக்குதல் குறித்துக் கருத்துக்கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொழில், சுகாதாரம், சம்பளப் பிரச்சினைகள், வடகிழக்கு பயங்கரவாதம், வாழ்க்கைச் செலவு ஆகிய பிரச்சினைகளைத் தீர்ப்பதைவிட்டு தமது கட்சியை அரசாங்கம் இல்லாதொழிக்க முற்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார். நேற்று பாராளுமன்றத்திற்குள் பயங்கரவாதம் புகுந்துவிட்டதெனவும், அதன் மூலம் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்ற வேளை அவற்றை தீர்க்காமல் ஹெல உறுமயவின் கட்சியின் மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரசு செயற்படுவது பெரும் கவலைக்குரியதென வாத பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## விலங்குடன் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

கேகாலைச் சிறைச்சாலையிலிருந்து புகையிரதம் மூலம் கொண்டு செல்லப்பட்ட இரு சிறைக்கைதிகள் கைவிலங்குடன் தப்பி ஓடியுள்ளனர்.

இவர்கள் மாத்தறைச் சிறைச்சாலைக்குச் சிறை அதிகாரிகளால் கொண்டு செல்லப்பட்ட போது கும்புறுகமுக புகையிரத நிலையத்தில் தப்பி ஓடியுள்ளனர் இவர்களைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

### வடக்கு–கிழக்கு பகுதிகளில்

# ஆசிரியர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கு இளைப்பாறிய ஆசிரியர்கள் நியமனம்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் 30 சதவீதத்துக்கு மேல் ஆசிரிய வெற்றிடங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு இளைப்பாறிய ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதற்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன அங்கீகாரம் வழங்கியுள்ளார். இத்தகவலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

விசேடமாக மூதூர், படுவான்கரை, வன்னி ஆகிய பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்படாமல் உள்ளன.

ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியத்துடன் அவர்கள் தங்களின் சேவைக் காலத்தில் இளைப்பாறும்போது பெற்ற கடைசிச் சம்பளத்தை சம்பளமாகவும் பெறுவார்கள் என்றும் மகாசிவம் தெரிவித்தார். (25)




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

முருகைக்கற்பாறைத் தொடர்கள் உலகில் 109 நாடுகளைச்சூழ தடுப்பு அரண்களாக விளங்குகின்றன. இவை கடல் அலைகள், புயற்கொந்தளிப்புக்களைத் தாங்கி கரையோரம் வாழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன.

# இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் இன்றைய காலகட்டத்திற்குப் பொருத்தமல்ல

## -செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே செய்துகொள்ளப்படவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமானதல்ல என ரெலோ இயக்கத்தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான எந்த ஒரு சமிக்ஞைகளையும் தற்போது அரசு வெளிப்படுத்தாத நிலையில் இந்த பாதுகாப்பு உடன்படிக்கை அவசியமற்றது எனவும் அவர் தெரிவித்தார். இந்த உடன் படிக்கை மூலம் இலங்கை அரசாங்கத்திற்கும், படையினருக்கும் தைரியம் அதிகரிக்குமேயன்றி தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை இனப்பிச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். இந்நிலையில் இந்த ஒப்பந்தம் செய்யப்படுவதன் மூலம் தமிழ் மக்கள் பெரும் ஏமாற்றத்தை எதிர் கொள்வரெனவும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

எனவே, இந்த உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்து அதனை இந்திய அரசு கைவிட முன்வரவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (32)

## விடுதலைப்புலிகள் வைகாசி இதழ் இன்று வெளியாகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு விடுதலைப்புலிகள் வைகாசி மாத இதழ் இன்று வெளியாகின்றது.

"சமாதானத்தின் எதிர்காலம் சர்வதேசத்தின் கைகளில்" என்ற தலைப்புச் செய்தியுடன் வெளியாகின்ற இவ்விதழில் "சிங்கள அரசின் படுகொலை அரசியல்", என்ற ஆசிரியர் தலையங்கமும் "புயலின் மையத்தில் புயல் இருப்பதில்லை" என்ற க.வே. பாலகுமாரன் அவர்களின் கட்டுரையும், "சைப்பிரஸ் துன்பம் தொடர் கதையாகிறது" என்ற அருளாளன் எழுதிய கட்டுரையும், "ஒளியேற்றும் காலம்", தமிழழகன் எழுதிய கட்டுரை உட்பட எல்லாளன் எழுதிய "சந்திரிகா அம்மையாரின் சமாதான விருப்பம் மனமாற்றமா? பாசாங்கா?" எனும் கட்டுரையும், பிரபுத்திரன் எழுதிய "சந்தேகமும், நம்பிக்கையும் ஒரு தோட்டத்துப் பயிரா?" எனும் கட்டுரை உள்ளிட்ட பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி இவ்விதழ் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நடேசன்...

அரசாங்கம்கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு அராஜக சூழ் நிலையை அரங்கேற்ற எடுக்கின்ற நடவடிக்கைகளைக் கண்டித்து இந்தக்கர்த்தால் நடத்தப்படுவதாக தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. (27)

## எவ்வித...

பெறவில்லை. பாராளுமன்றத்தினுள் எந்தவோர் உறுப்பினரும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனவும், "பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலுக்கு முகம்கொடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதுக்.பொன்னம்பலம் மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்கள் கண் சிகிச்சை

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண், மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர்கள் சிகிச்சை தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் பி.பகல் 2.00மணிவரை அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் ஜெயலிங்கம் அவர்களினால் அவை சம்பந்தப்பட்ட நோய்களுக்காக ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட உள்ளது.

யாழ்போதனா வைத்திய சாலையில் சேவையாற்றும் கண்சத்திர சிகிச்சை நிபுணர் சிவாநந்தன் அவர்களினால் கற்றாக் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் படுவதுடன் கண்சம்பந்தப்பட்ட நோய்களுக்கான ஆலோசனைகளும சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன. பயன்பெற விரும்புவோர் புதுக்குடி யிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் தங்களின் பதிவுகளை மேற்கொள்ளவும். (08)

## எமது....

வைத்து தாக்கப்பட்டுள்ளனர் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் குமாரதுங்க, மேர்வின் சில்வா, மகிந்தானந்த அலுத்கமகே, சிறிபதி சூரியாராய்ச்சி, அச்சாலா யாகொட உட்பட பா.உ குழுவினரே தாக்குதலை நடாத்தியுள்ளனர் எனவும் தம்மாலோக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளும்...

வதற்கு இடைக்கால தடைவிதிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். ஆளும் கட்சியினரும் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளச் சென்ற தேரரைத் தடுத்தனர். எனினும் நீதிமன்றத் தடைவிதிக்கப்பட்டுள்ளபோதும் அதற்கு முன்னரே அவரின் பதவி தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதைச் சுட்டிக்காட்டி சபாநாயகர் அகமீமன தயாரட்ணவை சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதற்காக அழைப்பு விடுத்தார்.

இதனையடுத்து சபையில் இருதரப்பினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்று இறுதியில் அது கைகலப்பாக மாறியது. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன், அக்மீமன தயாரட்ணவை, சபாநாயகர் ஆசனத்துக்கு முன்னால் பதவிப்பிரமாணம் செய்து கொள்வதற்கா அழைத்துச்சென்றார். இதன் போது

ஆளும் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே சபாநாயகரின் செங்கோலை பறித்துக்கொண்டு சென்று அதனை மறைத்துவைத்தார். செங்கோலை உரிய இடத்தில் வைக்குமாறு சபாநாயகர் பலமுறை சொல்லியும் பலன் கிட்டவில்லை. இந்த அசம்பாவிதங்களை அடுத்து புதிய பாராளுமன்ற உறுப்பினரின் பதவியேற்பு நிகழ்வு செங்கோல் இல்லாமலேயே இடம் பெற்றதாகவும், பார்வையாளர் பகுதியிலிருந்த பொதுமக்கள் சிறிலங்கா காவல்துறையால் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்சித் தலைவர்களின் அவசர கூட்டம் ஒன்று 15 நிமிடங்கள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. அப்போது தோன்றியுள்ள முறுகல் நிலைகுறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் அதிலும் ஜாதிகஹெலஉறுமயவின் பேச்சாளர் அத்துரலியரத்ன தேரருக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் விமல்வீரவன்சவுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்படவே கூட்டம் எவ்வித முடிவும் இன்றி நிறைவடைந்தது. இதனையடுத்து பாராளுமன்றம் பிற பகல் 2.30 அளவில் கூடியது. (32)

## ஜூலை...


அறிவித்தார். காலை 10. 45 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டிருந்த பாராளுமன்றம் மீண்டும் 2.20 மணியளவில் சபாநாயகர் லொக்கு பண்டார தலைமையில் கூடியது. அதன்போது செங்கோலும் மீளக்கிடைத்தது.

## தம்மிடம்...

ளன. எனவே பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பலமுள்ள எதிர்க் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் எனக் கோரும் தீர்மானத்தில் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று நடைபெறும் சந்திப்பு ஒன்றில் கையொப்பமிடவுள்ளனர். இதற்காக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கொழும்பிலேயே தங்கியிருக்குமாறு குறிப்பிட்ட கட்சிகளினால் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சனாதிபதிக்கும் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற பெரும்பான்மை பலம் தொடர்பில் தெரியப்படுத்தப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மாலை நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜெயசூரிய, மகிந்த சமரசிங்க மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் பங்கேற்றனர். இதே வேளை நேற்று பாராமன்றத்தில் அமைச்சர்களான ஜீவன் குமாரதுங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேவின் சில்வா ஆகியோரே பலாத்காரங்களில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர். இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் மோசமாக இடம்பெற்ற வன்முறை இதுவாகும் எனக் குறிப்பிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் புதிய உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு வரும் முன்னரே அவரது ஆசனம் ஆளும் தரப்பினரால் அகற்றப்பட்டதாக குற்றம் சுமத்தினார். புதிய பாராளுமன்ற உறுப்பினரின் நியமனம் கடந்த 19 ஆம் திகதியே தேர்தல் ஆணையாளரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட பாராளுமன்றப் பதவி உத்தியோகபூர்வமானதாகும். இதனையடுத்து மேற்கொள்ளப்படும் பாராளுமன்றத்திலான சத்தியப்பிரமாணமானது சம்பிரதாயமான நிகழ்வு மாத்திரமே என ஐக்கிய தேசியக் கட்சியினர் குறிப்பிட்டனர்.

பாராளுமன்றத்தை நீதிமன்றம் ஒன்றினால் கட்டுப்படுத்த முடியாது என்ற முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவின் கருத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். (32)



ர் 122 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று விண்ணில் வீனஸ் என அழைக்கப்படும் வெள்ளிக்கிரகம் சூரியனைக் கடக்கும் அபூர்வ நிகழ்வு நடந்துள்ளது.

வெள்ளிக்கோள் அடிக்கடி சூரியனை கடந்து செல்வது வழமை, ஆனால் பூமி-வெள்ளி-சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில இருக்கும் போது வெள்ளிக்கோள் கரும் புள்ளிபோல சூரியனைக் கடப்பதே நேற்று நடந்த அபூர்வ நிகழ்வாகும்.

## யாழ்.உரும்பிராய்ப் பகுதியில் எரிபொருட் கடை எரிந்து நாசம்

### - உரிமையாளருக்குக் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய்ப்பகுதியில் நேற்றிரவு எரிபொருட் கடை ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது. இதன் போது கடை உரிமையாளர் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இரவு 8.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் பெற்றோலில் தீப்பற்றிக் கொண்டதால் கடை எரிந்து நாசமாகியதுடன், கடை உரிமையாளர் காயங்களுடன் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (30)

### - சாட்சியை மிரட்டினார் -

## ரத்வத்தவின் மெய்ப்பாதுகாவலரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

உடத்தலவின கொலை தொடர்பான சாட்சியை மிரட்டியதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற போது பிஜரட்ண எனும் மேற்படி நபர் சாட்சியை மிரட்டியதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (32)

## அரசியல்....

ஈடுபட்டிருந்தனரென்றும் இத்தாக்குதலை இவர்களே செய்துள்ளனரென்றும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதி விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்ற பொழுது அரசியல் போராளிகள் எவரும் அங்கிருக்கவில்லை.

இது தொடர்பாக நேற்று மட்டு. மாவட்டச் செயலகத்தில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் நடாத்திய சந்திப்பின் போது புலிகளால் முறையிடப்பட்டுள்ளது.

## மலையக...

வகையில் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பில் 150 இற்கும் அதிகமான வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (27,33)

## செங்கோல்....

மோதல்களின் போது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக இரண்டு தரப்புக்கும் இடையில் மோதல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப படுகிறது. அதேநேரம் மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சரான சந்திரசேன விஜயசிங்கவை ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கேலிய ரம்புக்வெல தாக்கியுள்ளார். மறுபுறத்தில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராவை தாக்கியுள்ளார். இதற்கிடையில் மக்கள் விடுதலை முன்னணியில் பிரசாரச் செயலர் விமல்வீரவன்ச நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்களை புகைப்படம் எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே சிவாஜிலிங்கம் இந்தத் தருணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்து ஜாதிக ஹெறல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்துவதில் ஈடுபட்டிருந்தார் எனவும் அறியவருகின்றது. (32)


## சாவு அறிவித்தல்

### அம்பலவாணர் மங்களம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 29,டி. 10 உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் மங்களம் அவர்கள் 07.06.2004 திங்கட்கிழமை காலமானார். அன்னார் அம்பலவாணரின் அன்புமனைவியும், மதிவதனி (பிரான்ஸ்), மதிபவானி (இந்தியா), மதிவாணன் (கனடா), மதிவண்ணன் (பிரான்ஸ்), மதிசேகரன் (உருத்திரபுரம்), மதிகேசவன் (மாவீரர் 2ஆம் லெப் இளையவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோகரசீலன் (பிரான்ஸ்), தவலிங்கம் (இந்தியா), சிவகுமாரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், கோபிகா (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்), பிரசன்னா (பிரான்ஸ்), அனுசிகா (பிரான்ஸ்), பிரசாந் (பிரான்ஸ்), சரணியா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (புதன்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 3.00 மணியளவில் உருத்திரபுரம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்,

(4602) சி. அம்பலவாணர்(கணவர்).


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.